# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 159 சித்திரை 23ஆம் நாள் திங்கட்கிழமை 06 மே 2019 வள்ளுவர் ஆண்டு 2050


## சமூக ஊடகங்கள் மீண்டும் முடக்கம்

கொழும்பு, மே 6
நீர்கொழும்பு வன்முறையை அடுத்து நேற்று இரவு 10.30 மணிக்கு சமூக

21

## விபத்தில் ஒருவர்சாவு

யாழ்ப்பாணம், மே 6
பலாலி வீதியில் புன்னாலைக்கட்டுவன் சந்தியில் நேற்று

04

# நீர்கொழும்பில் பதற்றம்

- வீடுகள் மீது பரவலாகக் கல்வீச்சு
- வாகனங்கள், கடைகள் உடைத்து எரிப்பு
- முப்படையினர் முன்பாகத் தாக்குதல்
- இன்று காலை 7 மணிவரை ஊரடங்கு





கொழும்பு, மே 6
இலங்கையில் கடந்த இரு வாரங்களுக்கு முன் உயிர்த்த ஞாயிறு தினமன்று ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதால் சோகத்தில் மூழ்கியிருந்த நாடு, இயல்புநிலைக்குத் திரும்பி வருகின்ற நிலையில், நீர்கொழும்பில் நேற்று பெரும் வன்முறை வெடித்தது. இதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

21

## பழிவாங்க வேண்டாம்!

*மகிந்த கூறுகிறார்*

கொழும்பு, மே 6
உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பழிவாங்கும்

21

## வன்முறையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை

*தலைமை அமைச்சர் ரணில் உறுதி*

கொழும்பு, மே 6
நீர்கொழும்பில் நேற்று முன்னிரவு வன்முறையில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கையை அரசு

04

## இனவன்முறையை தடுத்து நிறுத்துக!

*அரசிடம் வலியுறுத்துகிறார் இரா.சம்பந்தன்*

கொழும்பு, மே 6
நீர்கொழும்பில் ஆரம்பித்துள்ள இன வன்முறையை அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்த

06

## ஸஹ்ரானின் பயிற்சி முகாம் காத்தான்குடியில் கண்டுபிடிப்பு

*பொலிஸார் நேற்றுச் சோதனை*



கொழும்பு, மே 6
ஐ.எஸ்.ஐ.எஸ்ஸின் பிரதான முகாமாகவும், நாட்டில் இடம்பெற்ற தாக்குதல்களின் பிரதான பயிற்சி நிலையமாகவும் மட்டக்களப்பு காத்தான்குடியில் செயற்பட்டு வந்த இடத்தை தாம் நேற்று அதிகாலை சுற்றி வளைத்து சோதனை நடத்தியுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

21

## கைதானோரை விடுவித்தாலே பல்கலை சுமுகமாக இயங்கும்

*மாணவர் ஒன்றியம் அழுத்தமாகத் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், மே 6
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சீரான செயற்பாட்டை மாணவர் ஒன்றியத் தலைவர், செயலர் மற்றும் சிற்றுண்டிச் சாலை நடத்துனர் ஆகியோரின்

06

## பாதாளக் குழுத் தலைவன் மாகந்துரே மதுஷ் நாடு கடத்தப்பட்டார்

கொழும்பு, மே 6
போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலகக் குழுவின் தலைவனான மாகந்துரே மதுஷ்

21

## மேலும் 4 இஸ்லாமிய அமைப்புக்களுக்கு தடை

*விரைவில் அரசிதழ் வெளியாகும்*

கொழும்பு, மே 6
அரசு அடுத்தவாரம் மேலும் நான்கு இஸ்லாமிய அமைப்புகளுக்குத் தடை விதிக்கவுள்ளதாக,

04

## மௌலவி ஒருவர் முல்லையில் கைது

*தடை செய்யப்பட்ட தௌஹீத் ஜமாத்துடன் செயற்பட்டார் என்கின்றனர் பொலிஸார்*

முல்லைத்தீவு, மே 6
முல்லைத்தீவு முள்ளியவளை நீராவிப்பிட்டிப்பகுதியில் மௌலவி ஒருவரை பொலிஸார்

04

## மாணவர்கள் கைது விவகாரத்தில் யாழ்ப்பாணப் பல்கலை நிர்வாகம் பொறுப்புடன் செயற்படவில்லை

*கூட்டாகச் சாடுகின்றன பொது அமைப்புக்கள்*

யாழ்ப்பாணம், மே 6
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றில் முதல் தடவையாக இராணுவத்தை சோத

21

## 24 கைப்பேசி வைத்திருந்தவர் கைதாகினார்

மன்னார், மே 6
மன்னார் தாழ்வுபாடு மற்றும் கீரி கிராமங்களில் முன்னெடுக்கப்பட்ட சோதனை

21

## சட்டத்தை தவறாகப் பிரயோகித்து கைது செய்தவர்களை விடுவியுங்கள்

*மாவை எம்.பி. வலியுறுத்து*

யாழ்ப்பாணம், மே 6
பயங்கரவாதச் சட்டம், அவசரகாலச் சட்டம் ஆகியவற்றை தவறாக நடைமுறைப்படுத்தியதால் கைதாகி

04

## காட்டுக்குள் நுழைந்தவர்களை தேடியபோது அகப்பட்டது கஞ்சா

*கட்டைக்காட்டில் சம்பவம்*

யாழ்ப்பாணம், மே 6
காட்டுக்குள் நுழைந்த சந்தேகத்துக்கிடமானவர்களைத் தேடிய போது, காட்டுப் பகுதியில் இருந்து 141கிலோ கிராம் கஞ்சா

05



## ஸஹ்ரானுடன் கருத்து மோதல்: தாக்குதல் இலக்குகள் குறைந்தன

*கைதாகியுள்ள ஐ.எஸ். உறுப்பினர் அப்துல்லா வாக்குமூலம் வழங்கியதாக பொலிஸார் தெரிவிப்பு*

கொழும்பு, மே 6
தற்கொலைக் குண்டுதாரிகளின் சூத்திரதாரியாக பொலிஸாரால் சொல்லப்படும் ஸஹ்ரானுக்கும் உறுப்பினர்களுக்கு இடையில் ஏற்பட்ட கருத்து மோதல் காரணமாகவே ஸஹ்ரான் நேரடி

04

## ஐ.எஸ். தாக்குதல் குறித்து

# 5 நாள்களுக்கு முன்னரே தனது தூதரகத்தை எச்சரித்தது சவுதி

### கசிகிறது புதிய தகவல்

கொழும்பு, மே 6

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலுக்கு 5 நாள்களுக்கு முன்னர் சவுதி அரேபிய அயலுறவுத்துறை அமைச்சால் இலங்கைக்கான சவுதி தூதரகத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. சவுதி அரேபியாவின் அயலுறவுத்துறை அமைச்சர் இப்ராஹிம் பின் அப்துல் ஹசீஸ் அல் அசாபினால் இலங்கைக்கான சவுதி அரேபியத் தூதுவர் அப்துல் நாசர் அல் ஹரேதிக்கு இரகசியக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக லெபனானின் அல்அஹெட் செய்தி இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

சவுதி அரேபியாவின் அயலுறவுத்துறை அமைச்சர் முக்கிய மூன்று விடயங்கள் தொடர்பில் இலங்கைக்கான அந்நாட்டுத் தூதுவரின் கவனததுக்குக் கொண்டுவந்ததாக இரகசியக் கடிதத்தை மேற்கோள்காட்டி அல்அஹெட் செய்தி இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான சவுதி அரேபியத் தூதரகத்தில் காணப்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உறுப்பினர்கள், குழுக்கள் தொடர்பான ஆவணங்கள், கணினி தரவுகள் உள்ளிட்ட அனைத்துத் தகவல்களையும் அழிக்குமாறு இரகசிய கடிதத்தில் முதலாவது விடயமாக குறிப்பிடப்பட்டிருந்ததாக லெபனானின் அல்அஹெட் செய்தி இணையத்தளம் சுட்டிக்காட்டி யுள்ளது.

மக்கள் அதிகளவில் கூடும் ஆலயங்கள் போன்ற இடங்களை எதிர்வரும் சில நாள்களுக்கு தவிர்க்குமாறும், குறிப்பாக உயிர்த்த ஞாயிறு தினத்தில் மக்கள் அதிகளவில் கூடும் இடங்களுக்குச் செல்லாதிருக்குமாறும், இலங்கைக்கான சவுதி தூதரகத்தின் பாதுகாப்பு நடவடிக்கையுடன் தொடர்புடைய அனைத்து அதிகாரிகளுக்கும் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்கும் அறிவிக்குமாறும் கடிதத்தில் இரண்டாவது விடயமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் அதிகாரிகள் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் எழுத்து மூலம் சவுதியின் அயலுறவுத்துறை அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறும் கடிதத்தில் மூன்றாவது விடயமாகக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்புலத்தில் பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர் தமது நாட்டின் அனைத்துக் குடிமக்களையும் இலங்கையில் இருந்து வெளியேறுமாறு சவுதி அரேபியத் தூதரகம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ.5)

## கஞ்சா கடத்தியதாக இருவர் கைதாகினர்

முல்லைத்தீவு, மே 6

முல்லைத்தீவு தீர்த்தக்கரை கடற்கரைப் பகுதியில் படகு மூலம் கஞ்சா கடத்தியதாகத் தெரிவித்து இருவரை நேற்றுக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடல்வழியாக கஞ்சா கடத்தல் இடம்பெறுவதாக முல்லைத்தீவு மாவட்ட பெருங்குற்றப்பிரிவு பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. பெருங்குற்றப் பிரிவு பொலிஸ் அதிகாரி கெங்காநாத் தலைமையில், சுரேன்றாச், ஹரிச, சஞ்சீவன தர்சன ஆகியோர் தீவிர கண்காணிப்பை மேற்கொண்டனர்.

'படகு ஒன்று கரையை வந்தடைந்தது' அதனை அவதானித்தோம். அந்த இடத்தை நெருங்கியபோது படகில் வந்து இறங்கிய 4 பேர் தப்பி ஓடினர். இருவரை துரத்திப் பிடித்தோம். அவர்கள் முல்லைத்தீவு மாவட்டம் கள்ளப்பாடு தெற்கைச் சேர்ந்தவர்கள். அவர்களிடமிருந்து 350 கிராம் கஞ்சாவை மீட்டுள்ளோம்' என்று பொலிஸார் குறிப்பிட்டனர். கைதான இருவரையும் நீதிவானின் இல்லத்தில் பொலிஸார் முற்படுத்தி னர். அவர்களை எதிர்வரும் 13ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

(ஒ.5,ரி3)

## துப்பாக்கி ரவைகள் முல்லையில் மீட்பு

முல்லைத்தீவு, மே 6

முல்லைத்தீவு செல்வபுரம் பகுதியில் தனியாரின் காணிக்கு முன்னால் கால்வாய் வெட்ட முற்பட்ட போது வெடிக்காத துப்பாக்கிரவைகள் மீட்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவுப் பொலிஸாருக்கு காணி உரிமையாளர் தகவல் வழங்கினார். பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று வெடிபொருள்களைப் பார்வையிட்டு அடையாளப்படுத்தியுள்ளனர்.

(ஒ.5,ரி3)

## பயங்கரவாதிகளின் தோற்றத்துக்கு பசில் ராஜபக்சவே முக்கிய காரணம்

### சாடுகிறார் விஜயதாஸ



கொழும்பு, மே 6

அடிப்படைவாத அமைப்புக்களுக்கு ஆதரவாக அமைச்சர் ரிசாட் பதியுதீன், கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா ஆகியோர் செயற்படுவதற்கான அதிகாரத்தை முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவே வழங்கியதாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் இருக்கும் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரரை பார்வையிட்டதைத் தொடர்ந்து, ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாதத்தை அரசியல் பலமில்லாமல் எம்மால் தோற்கடிக்க முடியாது. ஆனால், ரிசாட் பதியுதீன் மற்றும் ஹிஸ்புல்லா ஆகியோர்தான் இந்த பயங்கரவாத மற்றும் அடிப்படைவாத அமைப்புக்களுக்கு ஒத்துழைப்பாக இருக்கிறார்கள். ரிசாட் பதியுதீனுக்கு, ஹிஸ்புல்லாவுக்கும் இதற்கான அதிகாரத்தை 2008 - 2009 ஆம் ஆண்டுகளில் பசில் ராஜபக்சதான் கொடுத்தார். இந்த அதிகாரத்தை தற்போது யாராலும் பறிக்க முடியாது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தற்போது அடுத்த அரச தலைவர் தேர்தல் குறித்து மட்டும்தான் சிந்தித்துக் கொண்டி ருக்கிறார். இதற்காக முஸ்லிம் மக்களின் 10 இலட்சம் வாக்குகளை எப்படியாவது பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தமிழர்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றே பயங்கரவாத செயற்பாடுகளை அவர் கண்டும் காணாமல் இருக்கிறார்.

புலனாய்வுப் பிரிவினர் எச்சரிக்கைகளை விடுத்தும் அவர் அது குறித்து எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. புலனாய்வுப் பிரிவினர், பொலிஸ் உள்ளிட்ட எந்தவொரு தரப்பையும் செயற்பட இடமளிக்கவில்லை. மாறாக, தனக்குத் தேவையான அரச சார்பற்ற நிறுவனங்களின் தேவைக்காகவே அவர் செயற்பட்டதன் விளைவையே இன்று நாட்டு மக்கள் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ரிசாட் பதியுதீன், ஹிஸ்புல்லா, அஸாத் ஸாலி, முஜிபூர் ரஹ்மான் போன்றோரின் ஒத்துழைப்புக்கள் இன்றி இவ்வாறான பயங்கரவாதத் தாக்குதலொன்று இலங்கையில் இடம்பெற வாய்ப்பே இல்லை. இந்த நால்வரும்தான் இதன் பின்னணியில் இருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இவர்கள் ரணில் விக்கிரமசிங்கவின் நிழலிலேயே காணப்படுகிறார்கள். இவர்களின் பிரதான நோக்கம் அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதுதான். இதன் ஒருபகுதியாகவே புதிய பயங்கரவாதத் தடைச்சட்டமூலத்தைக் கொண்டுவரக் கூட முயற்சிகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால், இந்தச் சட்டவரைவை கொண்டுவர நாம் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை - என்றார்.

(ஒ.5)

## அமைச்சுப் பதவி தரமுடியாது ஆலோசகராக நியமிக்கலாம்

### மைத்திரியின் யோசனையை தூக்கிக் கடாசினார் பொன்சேகா

கொழும்பு, மே 6

பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுக்கு சட்டம், ஒழுங்கு அமைச்சர் பதவியை வழங்க மறுத்துள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அவரைப் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகராக நியமிப்பதற்கு இணங்கியுள்ளார். எனினும், எந்தவொரு ஆலோசகர் பதவியையும் ஏற்றுக் கொள்ள சரத் பொன்சேகா விரும்பவில்லை என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன,

ஈஸ்ரர் ஞாயிறு தாக்குதல்களை அடுத்து இஸ்லாமிய தீவிரவாதத்தை அடக்குவதற்கு, சரத் பொன்சேகாவை சட்டம், ஒழுங்கு அமைச்சராக நியமிக்க வேண்டும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான தலைவர்கள், மைத்திரிபால சிறிசேனவிடம் கோரியிருந்தனர். சரத் பொன்சேகாவை சட்டம் ஒழுங்கு அமைச்சராக நியமிக்க முடியாது என்று மைத்திரிபால அடியோடு நிராகரித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகராக அவரை நியமிக்கத் தயார் என்றும், தேசிய பாதுகாப்புச் சபை கூட்டத்துக்கும் அவரை அனுமதிக்க முடியும் என்றும் அரச தலைவர் மைத்திரி தெரிவித்துள்ளார். ஆனால், எந்தவொரு ஆலோசகர் பதவியையும் ஏற்றுக் கொள்ள சரத் பொன்சேகா விரும்பவில்லை எனக் கூறப்படுகிறது.

பொலிஸ் திணைக்களத்தை மீண்டும் சட்டம் ஒழுங்கு அமைச்சின் கீழ் கொண்டு வந்து, அதனை சரத் பொன்சேகாவிடம் வழங்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியினர் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர்.

(ஒ.5)



# சரித்திர படத்தை விரும்பும் தனுஷ்

தமிழ் சினிமாவில் முன்னணி நடிகர் தனுஷ். தொடக்க காலத்தில் இருந்து தொடர்ந்து வித்தியாசமான கதைகளை தேர்வு செய்து நடித்து வருகிறார். நடிப்பு மட்டுமின்றி, தயாரிப்பாளர், பாடகர், பாடலாசிரியர், இயக்குநர் என பன்முகத் திறமை கொண்ட இவர் நடிப்பில் அடுத்ததாக எனை நோக்கி பாயும் தோட்டா படம் ரிலீசாக இருக்கிறது.





தனுஷ் தற்போது வெற்றிமாறன் இயக்கத்தில் அசுரன் படத்திலும், துரை செந்தில்குமார் இயக்கத்திலும் நடித்து வருகிறார். ராம்குமார், கார்த்திக் சுப்புராஜ் படங்களில் நடிக்கவும் ஒப்பந்தமாகி இருக்கிறார்.

சரித்திர படமொன்றையும் இயக்கி நடித்து வருகிறார். இந்த நிலையில், பிரபல நாளிதழ் ஒன்றில் தொடராக வந்த வேள் பாரி கதையில் நடிக்க ஆர்வம் காட்டியுள்ளார்.

சு.வெங்கடேசன் எழுத்தில் வேள்பாரியின் வாழ்க்கையை மையப்படுத்தி வந்த இந்த நாவலுக்கு நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது. இயற்கைக்கும், மனித பேராசைகளுக்கும் இடையே நடக்கும் போராட்டம் பற்றிய கதை, 'வேள்பாரி' என்பது குறிப்பிடத்தக்கது.


## கருத்துச் சித்திரம்





சப்பாணி@manipmp

ஒருவர் எப்படி வாழ்கிறாரோ அப்படியே சிந்திக்கிறார் மார்க்ஸ்...





ஊர்க்காவலன்™

ஒரு தொழிலில் நாம் நினைத்த நேரதிற்கு விடுமுறை எடுக்க அனுமதி கிடைக்குமாயின் அதுவே பரிபூரண மனித சுதந்திரம்....



சிலந்தி™ @nandhu_twitts

"வாயத் திறந்து பதில் சொல்லு என்பவர்களிடம், வாயே திறக்காமல் இருப்பதுதான் நூதன வன்முறை..!!

twitter



## மனிதரைப் போல காணொலியை பார்த்து மகிழும் சின்பன்ஸி

சிம்பன்ஸி ஒன்று சாதாரணமாக மனிதர்களைப் போல் அலைபேசியில் 'இன்ஸ்டாகிராம்' பக்கத்தை பயன்படுத்தும் காணொலி ஒன்று வைரலாகியுள்ளது.

கைபேசிகளுக்கு குழந்தைகள், பெரியவர்கள் தான் அடிமையாகி கிடக்கின்றனர் என்றால், விலங்குகளையும் விட்டு வைக்கவில்லை. சில இடங்களில் செல்பிக்கு குரங்குகள் போஸ் கொடுக்கும் செய்தி நாம் அறிந்தது தான். இந்த நிலையில், மனித குரங்கு ஒன்று கைபேசியை அசாத்தியமாகப் பயன்படுத்தும் காணொலி ஒன்று இணையத்தில் பலராலும் பகிரப்பட்டு வருகிறது.

இந்தக் காணொலியை மைக் ஹோல்ஸ்டன் என்பவர் தனது 'இன்ஸ்டாகிராம்' பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அதில் மனித குரங்கு ஒன்று அலைபேசியில் இன்ஸ்டாகிராம் சமூக வலைதளப் பக்கத்தை மனிதர்களைப் போல் பயன்படுத்துகிறது.

தனக்கு தேவையான படங்கள் மற்றும் காணொலிகளை தானே தேர்வு செய்து பார்க்கிறது.

இந்தக் காணொலியை இதுவரை 15 லட்சம் பார்வையாளர்கள் பார்வையிட்டுள்ளனர். கீச்சகத்தில் சுமார் 6 லட்சம் மக்கள் பார்வையிட்டுள்ளனர். தற்போது இந்த காணொளி காட்சிகள் இணையத்தில் வைரலாகி வருகின்றது.








## இது புதுசு

கால்களில் உள்ள அழுக்குகளை நீக்குவதற்கான பிரஸ் (தூரிகை) அறிமுகமாகியுள்ளது. இது 950 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.





# பகை உணர்வு கூடாது

ஒரு நாள் வகுப்பறையில் பாடம் நடத்திகொண்டிருக்கும் போது ஆசிரியர் மாணவர்களிடம் "மன்னிக்க முடியாத கோபம் யார் மீதேனும் இருக்கிறதா உங்களுக்கு? சந்தர்ப்பம் கிடைத்தால் யாரையேனும் பழி வாங்கத் துடிக்கிறீர்களா, நீங்கள்?" என்று கேட்டார் ஆசிரியர்.

மாணவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் "ஆமாம்... ஐயா" என்றார்கள். ஆசிரியருக்கு மிகுந்த வியப்பு. ஒவ்வொருவராக அழைத்து"மன்னிக்கவும் மறக்கவும் முடியாத அளவுக்கு எத்தனை கோபங்கள் உள்ளன?" என்று கேட்டார்.

ஒவ்வொருவரும் ஐந்து, பத்து என்று அடுக்கி கொண்டே சென்றார்கள் மாணவர்களுக்கு பழிவாங்கும் எண்ணம் தவறு என்று புரிய வைக்க நினைத்தார்.

ஒவ்வொரிடமும் ஒரு பையை கொடுத்தார் , வகுப்பறைக்கு ஒரு கூடையில் தக்காளி கொண்டுவரப்பட்டது. யார்மீது எத்தனை பழிவாங்கும் எண்ணம் உள்ளதோ அத்தனை தக்காளிகளை தங்கள் பையில் எடுத்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. இந்த தக்காளி பையை எப்போதும் உங்களுடனே இருக்க வேண்டும், தூங்கும் போதும் அருகிலேயே வைத்திருக்கவேண்டும் என கட்டளையிட்டார். ஒன்றும் அறியாமல் தலையை ஆட்டினார்கள் மாணவர்கள் .

ஓரிரு நாள்கள் ஒரு குறையும் இல்லை. ஆனால், அடுத்தடுத்த நாள்களில் தக்காளிகள் அழுகி நாறத் துவங்கின. நாற்றம் அடிக்கும் பையுடன் வெளியே செல்ல மாணவர்கள் கூச்சப்பட்டனர். ஒரு கட்டத்தில்... ஆசிரியரிடம் சென்று, பைகளைத் தூக்கி எறிய அனுமதி கேட்டனர்.

மெல்லப் புன்னகைத்த ஆசிரியை, "நாற்றம் வீசுபவை தக்காளி மட்டுமல்ல. அந்த நாற்றத்தைப் போலவே, உங்கள் பகைமை உணர்வும் பழி வாங்கும் குணமும் மனதுக்குள் அழுகி நாறிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, பகை பழியை மறந்து மன்னித்து விடுவதாக இருந்தால், தக்காளி பையை தூக்கி எறியுங்கள்" என்றார்! அப்போது தான் மாணவர்களுக்கு மனத் தெளிவு பிறந்தது. அப்போதே தக்காளி பைகளை குப்பைத் தொட்டியில் வீசிய மாணவர்கள்,பகை மறந்து ஒருவரையருவர் ஆரத் தழுவி கொண்டு வகுப்பறைக்குத் திரும்பினர்.

## தடம் மாறிய தமிழ் பழமொழிகள்

**கல்லைக் கண்டால் நாயைக் காணோம்!**
**நாயைக் கண்டால் கல்லைக் காணோம்!!**

சரியான பழமொழி

**கல்லைக் கண்டால் நாயகனைக் காணோம்,**
**நாயகனைக் கண்டால் கல்லைக் காணோம்.**

**விளக்கம்**

இங்கு நாயகன் என்பது கடவுளை குறிக்கிறது. கல்லால் செதுக்கப்பட்ட ஒரு கடவுள் சிலையை நீங்கள் பார்க்கிறீர்கள். அதைக் கல்லாகப் பார்க்கும் போது, அங்கே கடவுளைப் பார்க்க மாட்டீர்கள். அதையே, நீங்கள் கடவுளாகப் பார்க்கும் போது கல்லைப் பார்க்க மாட்டீர்கள். இதில் நாயகன் என்ற வார்த்தை மருவியே நாய் என்றாகி விட்டது.

---

**நல்ல மாட்டுக்கு ஒரு சூடு**

சரியான பழமொழி

**நல்ல மாட்டுக்கு ஒரு சுவடு**

**விளக்கம்**

சந்தையில் மாட்டை வாங்கும்போது அது பதிக்கும் தடம் சுவடு... அழுத்தமான சுவட்டைப் பதிக்கும் மாடே அதிகப் பலம் வாய்ந்தது... ஒரு சுவட்டைப் பார்த்தாலே மாட்டின் பலம் புலனாகும்.

## உலகத்தை மாற்ற நினைப்பவர்கள்

அரிய செயலைச் செய்து முடிப்பது வலிமையால் அல்ல; விடாமுயற்சியால்தான்

**ஜேம்ஸ் ஆலன்**

தகவல்கள் தெளிவாக இருந்தால் முடிவுகள் தானாகவே வந்து குதிக்கும்

**பீட்டர் டிரக்கர்**

வரலாற்றை கற்றுணர்வது நல்லது. அது போன்ற வரலாற்றை படைப்பது அதனினும் மேலானது

**ஜவஹர்லால் நேரு**

பெரிய கனவுகளைக் காணுங்கள், மனிதர்களின் ஆன்மாவை அசைத்துப் பார்க்கிற ஆற்றல் பெரிய கனவுகளுக்கு மட்டுமே உண்டு

**மார்கஸ் அரேலியஸ்**

நேரப்படி வேலையைச் செய்கிறவர்கள் முறையான சிந்தனை வளத்தைப் பெற்றவர்கள்

**பிட்டின்**

மன அமைதியோடு இருப்பவனுக்கு என்றும் ஆபத்து இல்லை

**லாவோட் ஸே**

எப்போதும் மனம் தூய்மையாக இருந்தால், முகம் புத்துணர்ச்சியுடன் பிரகாசிக்கும்

**எமர்சன்**

மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளுமல்ல. இடையூறுகளும் துன்பங்களுமே.

**அரிஸ்டாட்டில்**

தங்கள் கனவுகளின் அழகை நம்புகிறவர்களுக்கே எதிர்காலம் சொந்தம்

**எலியனார் ரூஸ்வெல்ட்**

வாழ்க்கையை வெறுமனே வாழாதீர்கள். உங்களுக்கென்று ஒரு வாழ்க்கையை வடிவமைத்து வாழுங்கள்.

**ஜப்ஃரான்**

---

### விபத்தில்...

மாலை 6.30 மணிக்கு இடம்பெற்ற மூடுந்து ஈருருளி விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது:

புன்னாலைக்கட்டுவனிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த ஈருருளியை, பின்னால் வந்த மூடுந்து (ஹைஏஸ்) மோதியது. ஈருருளியில் கணவருடன் வந்த பெண் விபத்தில் சிக்கியுள்ளார். நான்கு பிள்ளைகளின் தாயான சந்திரன் சுசிகலா (வயது 48) என்பவரே விபத்தில் உயிரிழந்துள்ளார். அவருடைய கணவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். வாகனச் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஓ.5,26)

### சட்டத்தை...

யுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களையும், ஊழியரையும் உடனடியாக விடுவிக்கவேண்டும். இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சோ.சேனாதிராசா கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடகக் குறிப்பில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழர் தாயகம் இப்போது இராணுவமயமாகிவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இங்கு இராணுவத்தை தொடர்ந்து வைத்திருக்கவேண்டும் என்று கூறியதாக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் பொய்யான கருத்தைத் தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் விடுதலைக்காக குரல் கொடுத்த சட்டத்தரணிகள் எல்லோரும் பாராட்டப்படவேண்டும். இந்த நேரத்தில் அது தான் செய்யப்படவேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் ஐ.எஸ். ஆதரவாளர்கள் அல்ல. அவர்கள் தமிழ் உணர்வாளர்கள். அவ்வாறான நிலைமையில் பயங்கரவாதச் சட்டத்தையும், அவசரகாலச் சட்டத்தையும் அவர்கள் மீது ஏன் பிரயோகிக்கின்றார்கள்?

பயங்கரவாதச் சட்டம், அவசரகாலச் சட்டம் ஆகிய நடவடிக்கைகளால் மக்களின் அடிப்படை உரிமைகளும், மனித உரிமைகளும் எவ்வகையிலும் பாதிக்கப்படாமலும், இராணுவ மயமாக்கலுக்கு இடமளிக்காவகையிலும், பொதுமக்களும் வாழ்விடங்களும் பாதுகாக்கப்பட வேண்டும். பயங்கரவாதச் சட்டம், அவசரகாலச் சட்டம் தவறாக நடைமுறைப்படுத்தப்பட்டதால் கைதாகியுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும், ஊழியரும் விடுவிக்கப்படவேண்டும் - என்றுள்ளது. (ஓ.5)

### மேலும்...

மூத்த அரச அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

அவசரகாலச் சட்ட விதிமுறைகளின் கீழ், மேலும் 4 இஸ்லாமிய அமைப்புகளைத் தடை செய்யும் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடையவை என்று கண்டறியப்பட்ட தேசிய தௌஹீத் ஜமாத் மற்றும், ஜமியத்து மில்லாது இப்ராகிம் ஆகிய அமைப்புகள் கடந்த வாரம் அரசால் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் தடை செய்யப்பட்டன. இந்த அமைப்புகள் தீவிரவாத அமைப்புகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்புகளுடன் தொடர்புகளை கொண்டிருந்த மேலும் நான்கு இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகளே அடுத்த வாரம் தடை செய்யப்படவுள்ளன. (ஓ.5)

### மௌலவி...

கைது செய்துள்ளனர்.

மாவனெல்ல பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய மௌலவி நீராவிப்பிட்டி பகுதியில் தங்கி இருப்பதாகக் கிடைத்த தகவலுக்கு அமைவாக அவரைக் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். அவர் தடைசெய்யப்பட்ட அமைப்பான தௌஹீத் ஜமாத்துடன் இணைந்து செயற்பட்டார் என்றும், அந்த அமைப்பின் கூட்டங்களை நடத்தினார் என்றும் விசாரணைகளில் தாம் கண்டறிந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவரை நீதிமன்றில் முற்படுத்தியபோது, இன்று வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ஓ.5,ரி3)

### ஸஹ்ரானுடன்...

யாக தற்கொலை தாக்குதலை மேற்கொண்டதாகவும், தற்கொலைத் தாக்குதல் இலக்குகள் குறைவடைந்ததாகவும், முக்கிய சந்தேகநபரான மொஹமட் இப்ராஹிம் சாதிக் அப்துல்லா வாக்குமூலம் வழங்கியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பயங்கரவாத தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனும் குற்றச்சாட்டில் பொலிஸாரால் தேடப்பட்டுவந்த சந்தேகநபர்களில் இருவர் கம்பளைப் பகுதியில் கடந்த வாரம் ஞாயிற்றுக் கிழமை கைது செய்யப்பட்டு குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மொஹமட் இப்ராஹிம் சாதிக் அப்துல்லா மற்றும் மொஹமட் இப்ராஹிம் சாஹித் அப்துல்லா ஆகிய இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

மொஹமட் இப்ராஹிம் சாதிக் அப்துல்லா விசாரணைகளின்போது சில தகவல்களை வழங்கியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல்களுக்கு 25 நாள்களுக்கு முன்னதாக, ஸஹ்ரான் ஹாசிம் மற்றும் உறுப்பினர்களுக்கு இடையில் கருத்து மோதல் ஏற்பட்டது. இதன் காரணமாக ஈஸ்ரர் தினத்தன்று நடத்தப்படவிருந்த மேலும் பல தாக்குதல்கள் நடத்தப்படாமல் தவிர்க்கப்பட்டன. ஸஹ்ரானை தலைவர் பதவியிலிருந்து நீக்கி, அவருக்கு எதிராக தாம் குரலெழுப்பியதுடன் தங்களுக்கான வேறு தலைவரொருவரை நியமித்துக் கொண்டு, வேறொரு பள்ளிவாசலுக்கு சென்றோம். இதன் காரணமாகவே ஸஹ்ரானும் நேரடியாக தற்கொலை தாக்குதல் நடத்த தீர்மானித்தார். திட்டமிட்டவாறு தாக்குதல் நடத்தப்பட்டிருந்தால், உயிரிழப்புக்கள் பல மடங்காக அதிகரித்திருக்கும் என்று வாக்குமூலம் வழங்கியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஓ.5)


### வன்முறை...

எடுக்கும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்றிரவு அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறன்று ஒரு பக்கம் கொழுந்து விட்டெரிந்த மத வன்முறையை நாம் அடக்கிய நிலையில், இன்னொரு பக்கம் இன வன்முறைக்குத் தூபமிடப்பட்டுள்ளது. நீர்கொழும்பு வன்முறையில் ஈடுபட்டவர்கள் அனைவரும் கைதுசெய்யப்படுவார்கள். அவர்களுக்குக் எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை, நீர்கொழும்பில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமையை எமது முப்படையினரும் பொலிஸாரும் இன்றிரவே (நேற்றிரவு) கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். பாதுகாப்புக் கருதியே அங்கு பொலிஸ் ஊரடங்குச் சட்டம் இன்றிரவு (நேற்றிரவு) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் எவரும் அச்சமடையத் தேவையில்லை - என்றார். (ஓ.5.22)

## மரண அறிவித்தல்



பிறப்பு 11 . 11 . 1925

இறப்பு 05 . 05 . 2019

திருமதி

### மாணிக்கம் செல்லத்துரை

பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் செல்லத்துரை நேற்று (05.05.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான தம்பு - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பு செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னம்மா, கந்தையா, தங்கமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், இரகுநாதன், சண்முகராஜா (ஜேர்மனி), சுதா ஆகியோரின் அருமைத் தாயும், சந்திரா, ராஜி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியும், நவநீதன் - ரஞ்சி, அஜந்தா - கண்ணன், அனித்தா - கமல், அருணியா - மணிதீபன், தினேஷ், நிகஸ்தியன் (ஜேர்மனி), மயூரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும்.யஸ்வினா, விசாகன், தஸ்வின், நிசானா, வாகீஸ், சகானா, சந்துரு, தஸ்னா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2019) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்கல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

137, பொற்பதி வீதி,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### செல்வநாயகம் கமலநாதன்

*(இளைப்பாறிய வடபிராந்திய செயலாற்று முகாமையாளர், இலங்கை போக்குவரத்துச் சபை, அகில இலங்கை சமாதான நீதிவான்)*



தோற்றம் 06.12.1948 மறைவு 05.05.2019

யாழ்.நீர்வேலி தெற்கு, கந்தசாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், துன்னாலை வடக்கு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட செல்வநாயகம் கமலநாதன் நேற்று (05.05.2019) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் (குலம்) - இராசம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான வேலும்மயிலும் - இலட்சுமியம்மாள் தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற இராசேஸ்வரியின் அன்புக் கணவரும், கிரிஷாந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ். மாவட்ட செயலகம்), கிரிதரன் (கணக்காளர்,லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பத்மநாதன் (இளைப்பாறிய அதிபர்), செல்வநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், விக்னேஸ்வரன் (சிரேஷ்ட விரிவுரையாளர்- யாழ்.பல்கலைக்கழகம்), ஜசிந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், வேணுஷன், டானிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும், மணிலால்தேவி, சிவதர்சினி (லண்டன்), இராசலட்சுமி, காசிதாஸன் (முகாமையாளர், துபாய்), ஜெயலட்சுமி (லண்டன்), சிவசுப்பிரமணியம் (ஆனந்தன் - லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2019) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் துன்னாலை வடக்கு வல்லியாநந்தத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தியான்காடு இந்து மயானத்துக்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வல்லியானந்தம் பிள்ளையார் கோயிலடி,
துன்னாலை வடக்கு, கரவெட்டி.

(K/609)
(11.17)

தகவல்:
குடும்பத்தினர்.

### காட்டுக்குள்...

மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறுகின்ற னர். வடமராட்சி கட்டைக்காடு பூனைத் தொடுவாய் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கட்டைக் காட்டு கடற்கரையில் நேற்றுமுன்தினம் படகிலிருந்து இறங்கிய சிலர் காட்டுப் பகுதிக்குச் சென்றனர். அவர்கள் திரும்பி வரவில்லை. தற்போதைய சூழலில் இது அந்தப் பகுதி மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது. பதற்றமடைந்த மக்கள் காட்டுப்பகுதிக்குள் தேடுதல் நடத்த ஆரம்பித்தனர். அதேசமயம், இராணுவத்தினருக்கும், பொலிஸாருக்கும் அறிவித்தனர். அவர்களும் காட்டினுள் புகுந்து தேடுதல் நடத்தினார்கள். எவரும் பிடிபடவில்லை. ஆனால் 5 உரப் பைகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அவற்றைப் பாதுகாப்பாக சோதனையிட்ட பின்னர் திறந்து பார்த்தனர் பாதுகாப்புத் தரப்பினர். பொதி செய்யப்பட்ட நிலையில் கஞ்சா இருப்பது கண்டறியப்பட்டது. அவை பொலிஸாரால் மீட்கப்பட்டன. அவற்றின் நிறை 141 கிலோ என்று பொலிஸார் கூறுகின்றனர். (ஓ.5,21,26,214)

## வீடு வாடகைக்கு

இராமலிங்கம் வீதி, திருநெல்வேலியில் (கோயில் வீதி முடிவில்) களஞ்சியமாக பயன்படுத்தக் கூடிய பழையவீடு (2000sqfeet) அரச நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் பல்தேசிய நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப்படும்.

(CS 25107)
(14.17)

தொடர்பு: 077 6696208

## கண்ணீர் அஞ்சலி



அரசறிவியல் துறையின்
சிரேஸ்ட விரிவுரையாளரும் அரசறிவியல்
ஒன்றியத்தின் பெரும் பொருளாளருமான
ரி.விக்கினேஸ்வரனின் அன்பு மாமனார்
**செல்வநாயகம் கமலநாதன்**
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**அரசறிவியல் துறை அரசறிவியல் ஒன்றியம்
யாழ். பல்கலைக்கழகம்**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 08 . 02 . 1942

உதிர்வு 06 . 04 . 2019

### அமரர் தனலட்சுமி பேரம்பலம்

**(ஓய்வுநிலை ஆசிரியை - அல்வாரை அ. த. க. பாடசாலை)**

கடந்த (06.04.2019) சனிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (06.05.2019) திங்கட் கிழமை மு. ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் தாங்களும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மீசாலை வடக்கு,
மீசாலை.

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில் 15.06.1951

ஆண்டவன் அடியில் 08.04.2019

2019 ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி அன்று
இறைபதம் அடைந்த எமது
குடும்பத்தலைவர்
அமரர்
**கணபதிப்பிள்ளை
சிவகுமாரன்**
அவர்களது மறைவுச்செய்தி கேட்டு வந்து
பல்வேறு வழிகளில் உதவி
புரிந்தவர்களுக்கும்
அத்துடன் இறுதிக்கிரியைகளில்
கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், அனைவருக்கும் நன்றியைத்தெரிவித்துக் கொள்வதுடன் தொலைபேசி மூலம் இரங்கலைத் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (07.05.2019) செவ்வாய்க் கிழமை அதிகாலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று சபீண்டீகரண கிரியைகள் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். மறுநாள் 08.05.2019 புதன்கிழமை மு.ப 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(தயவு கூர்ந்து இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்)

வடலிவளவு,
புலோலி தெற்கு, புலோலி

குடும்பத்தினர்.
021 226 1245, 076 411 6333

## SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 966
சீட்டிழுப்பு திகதி 2019.05.04 சனிக்கிழமை

G 05 21 30 47

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்ட செயலகத்தில்
கடமையாற்றும்
வி.கிருஷாந்தியின் அன்புத் தந்தை
**செல்வநாயகம் கமலநாதன்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அபிவிருத்தி உத்தியோகத்தர்
(சமூக சேவைகள்) யாழ்.மாவட்டம்.

(K/610)(11,17)

## திறப்பு விழா அழைப்பு

ஈஸ்வரி இராஜயோக சிகிச்சா நிலையம்
திறப்பு விழாவும்
அன்புக்கே வெற்றி நிச்சயம்
நூல் வெளியீட்டு விழாவும்

காலம் :- 07.05.2019 செவ்வாய்க்கிழமை
காலை 10.25 – 01.55 மணிவரை
இடம் :- இராஜயோக சிகிச்சா நிலையம்
மானிப்பாய் வீதி, பாலாவோடை,
இணுவில்.

திறப்பு விழா ஆரம்ப நிகழ்வு :-
அக்குப்பஞ்சர் டாக்டர் எஸ்.சங்கர்
அவர்களால் திறந்து வைக்கப்படும்.

இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அஷ்டாங்க யோகி நா.குலசிங்கம் ( DNYS )
ஸ்தாபகர், ஈஸ்வரி இராஜயோக
சிகிச்சா நிலையம். 077 557 7517

## மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்
## பகிரங்க பிஸ்கால் ஏலவிற்பனை

அருந்தவம் மகள் கீர்த்திகா
ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர்
வழக்காளி

வழக்கு இல :- காசுச் சுருக்கம்/ 108/2014

கந்தசாமி சேதுரட்ணம்
கைம்பெண் அனுசுயா
ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர்.

-எதிராளி

மேற்படி இலக்க வழக்கில் 2017.01.31 ஆம் திகதிய கௌரவ மன்றின் கட்டளைக்கமைவாகக் குறித்த எதிராளியிடமிருந்து வழக்காளிக்குச் செலுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்ட ரூபா 400,000/- உம், தீர்வைத் திகதியிலிருந்து அதாவது 2016.06.01 ஆம் திகதியிலிருந்து குறித்த தொகை செலுத்தப்படும் வரை குறித்த தொகைக்கு எதிராளியிடமிருந்து சட்ட வட்டியும், வழக்குச் செலவுகளையும் அறவிடுவதற்காக மல்லாகம் மாவட்ட நீதிமன்றப் பதிவாளருக்கு வழங்கப்பட்டுள்ள தீர்வை நிறைவேற்றுதல் அனுமதிப்பத்திரத்தின் படி எதிராளிக்குச் சொந்தமான பொருள்கள் 2017.11.08 ஆம் திகதி தடை செய்யப்பட்டுள்ளன.

அதன்படி 02.05.2019 அன்று இந்நீதிமன்றப் பதிவாளராகிய N.K.கஜரூபன் ஆகிய என்னை இவ்விற்பனையை நடத்த கௌரவ மன்று பணித்துள்ளதால் கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள அசையும் சொத்துக்கள் இன்றிலிருந்து 14 நாள்களின் பின் அதாவது 22.05.2019 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு அப்பொருள்கள் வைக்கப்பட்டுள்ள ஆவரங்கால் கிழக்கு, புத்தூர் என்ற எதிராளியின் முகவரியில் வைத்து என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

கொடுப்பனவுகள் அனைத்தும் பணமாகச் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு, காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

| | |
|---|---|
| Toshiba தொலைக்காட்சி - 36" | - 01 |
| Sanyo வர்க்க குளிர்சாதனப் பெட்டி (ஒரு கதவு கொண்டது) | - 01 |
| LG Model Boofer இலக்கம் SH 36 sd -w | - 01 |
| Karaoke LG - DVD Player | - 01 |
| சோபா செற்றி | - 02 |
| National Stand Fan (Model Japan) | - 01 |

- பதிவாளர் -

(CS 25138)(11,1

## கோடிபதி ஷனிடா

சீட்டிழுப்பு வாரம்: 438 சீட்டிழுப்பு திகதி: 2019.05.03
வர்ணம்: செம்மஞ்சள் வெள்ளிக்கிழமை

Z 06 35 37 80

2019.05.05 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு பச்சை நிற டிக்கட்டுகள் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 601
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.05.05
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 58,738,480/-

வெற்றி இலக்கங்கள்
01 17 47 50 H

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 05.05.2019 | 2511 | ஊதா |

கடகம்

வெற்றி இலக்கங்கள் 19 24 36 38

செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,636,420 /=

07.05.2019ம் திகதி செவ்வாய்க் கிழமை சிகப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் கடமையாற்றும்
உற்பத்திதிறன் உத்தியோகத்தர்
**திருமதி ப. துஷாயினியின்** தந்தையும்,
கிராம உத்தியோகத்தர் வேலணை J/12,13
**பத்மரூபனின் மாமனாரும்** ஆகிய
**கார்த்திகேசு விவேகானந்தன்**
அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரின் இறப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

பிரதேச செயலர் மற்றும் ஊழியர் நலன் புரிசங்கம், **பிரதேச செயலகம், வேலணை.**

## பணியாளர்கள் தேவை

**1. கணக்குப் பதிவாளர் :**
ஆண்/பெண், பெண் : 50 வயதிற்கு மேல்

**2. விற்பனையாளர் :**
இரும்புப் பொருள்கள் விற்பனையில் அனுபவம் உள்ள ஆண்/பெண் இருபாலாரும்

**3. கனரக வாகன சாரதிகள் :**
05 வருடங்கள் அனுபவம் உள்ளவர்கள்,
சிங்களம் தெரிந்தவர்கள்.

**- பொது முகாமையாளர்,**
**சிற்றி ஹாட்வெயார்ஸ் அன் ஸ்ரோர்ஸ்**
**55, 57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

## சேவை நலன் பாராட்டு



திருமதி
**ரஜனி சிறிகரன்**
(BA, Maths Trd, S.L.T.S -I)
உப அதிபர்
சேவைக்காலம்
26.04.1982 - 06.05.2019

மானியம் பதி தந்த மாண்புமிகு
- மங்கையே
ஆனையம் பதியிலே தன்னலமற்ற
- சேவை தந்தீரே
சேவையில் கடி காரமாய் பண்பாட்டில்
- சிகரமானீரே
சேவையின் ஓய்வில் சீரோடும்
- சிறப்போடும்
நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்
யா/ஆனைக் கோட்டை
பாலசுப்பிரமணிய வித்தியாலயம்

## இனவன்...

வேண்டும். வன்முறையாளர்கள் அனைவரும் கைதுசெய்யப்பட வேண்டும். இவ்வாறு வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

இது தொடர்பில் நேற்றிரவு அவர் தெரிவித்ததாவ: மத வன்முறை, இன வன்முறை இந்நாட்டில் இனிமேல் வேண்டாம். இவை மீண்டும் நடைபெறாதவாறு அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். முப்படையினரும் பொலிஸாரும் பக்கச்சார்பின்றி தமது பணிகளைச் செய்ய வேண்டும் - என்றார். (ஓ.5,22)

## கைதானோரை...

விடுதலையே சாத்தியமாக்கும். ஒட்டுமொத்த பல்கலைக்கழகச் சமூகத்தின் நலனை கருத்தில் கொண்டு கைதானோரின் விடுதலையில் உரியவர்கள் கவனம் செலுத்தவேண்டும். இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சோதனைகளில் மாணவர் ஒன்றிய அலுவலகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரின் படம் மற்றும் முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்புக்கு எதிரான போராட்டங்களில் பயன்படுத்தப்பட்ட பதாகைகள் என்பன காணப்பட்டதனைக் காரணமாக்கி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் திவாகரன், செயலர் பபிலராஜ் மற்றும் மருத்துவபீட வளாகத்தில் உள்ள சிற்றுண்டிச் சாலையில் காணப்பட்ட படமொன்றை காரணம் காட்டி சிற்றுண்டிச்சாலை நடத்துனர் ஆகியோர் பாரதூரமான சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இத்தகைய படங்கள் பல ஆண்டுகளுக்கு முன்னர் வைக்கப்பட்டவையாகும். போர் நிறைவடைந்து கடந்த பத்தாண்டு காலத்தில் இலங்கையிலுள்ள அனைத்து இன மாணவர்களும் இனபேதங்களை கடந்து நட்புறவுடன் பழகக்கூடிய நிலை காணப்பட்டது. எமது நாட்டில் எவ்வாறான இனமுரண்பாடுகள் தோன்றும் நிலையிலும் எமது மாணவர்களின் ஒற்றுமையில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தியிருக்கவில்லை.

இலங்கையின் எதிர்காலத்தில் நல்லிணக்கத்துக்கான அடித்தளமாகவே எமது பல்கலைக்கழக கல்வியை நோக்கினோம். எமது பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி பல்கலைக்கழகத்தை விரைவில் தொடங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்க வந்த இராணுவம் எப்போதோ வைக்கப்பட்ட படங்களைக் காரணம் காட்டி இவர்களை கைது செய்திருப்பது எம் மாணவர்களிடையே ஒற்றுமையைச் சீர்குலைக்குமோ என்ற அச்சம் தோன்றியுள்ளது.

எமது பல்கலைக்கழக வரலாற்றில் இதுவரையிலும் அனுமதியுடன் இராணுவம் உட்பிரவேசித்திருக்கவில்லை. எமது மாணவர்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு பல்கலைக்கழக நிர்வாகமும், மாணவர் ஒன்றியமும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியிருந்தன. ஆனாலும் எமது பாதுகாப்பை உறுதிப்படுத்தவென வந்த இராணுவம் அப்பாவி மாணவர்களையும், சிற்றூண்டிச் சாலை நடத்துனரையும் கைது செய்திருப்பது மாணவர்களிடையே இராணுவத்தின் மீதான நம்பிக்கையை மீண்டும் மலினப்படுத்தியுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ.5)

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
**021 222 6113**

## மரண அறிவித்தல்கள்



### திருமதி செல்லம்மா செல்வம்

கோண்டாவில் குட்செற் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா செல்வம் 03.05.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டியர் - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தர் செல்வத்தின் அன்பு மனைவியும், சாரதாதேவி, தர்ஷிகா (பட்டு), சர்வேஸ்வரன் (பிரான்ஸ்), யோதீஸ்வரன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயும், செல்வம், சதாசிவம், மதிவதனி (பிரான்ஸ்), பிறேமலதா (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியும், சுதர்சன், சணா (இத்தாலி), பிரகலாதன் (பிரபு - இத்தாலி), சுதர்ஷினி, துவாரகன், யசோதரா, துஷ்யந்தன், பிரசாந், தனுஷா (பிரான்ஸ்), சாதுஷா (பிரான்ஸ்), விதுரன் (பிரான்ஸ்), நிராஞ்சலி (இத்தாலி), அட்சயன் (இத்தாலி), நிருஷா (இத்தாலி), அபிஷா (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2019) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(cs 23659)

**குட்செட் வீதி,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### சுந்தரலிங்கம் பிறேமச்சந்திரன்



யாழ். மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் டென்மார்க், கனடா, Mississaga ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் பிறேமச்சந்திரன் கடந்த (29.04.2019) திங்கட்கிழமை கனடாவில் இறை வனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம் (மலேரியா தடுப்புமேற்பார்வையாளர்)-மீனாட்சிப் பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியை - மந்துவில் ஸ்ரீபாரதி) தம்பதிகளின் பாசமிகு புதல்வரும் காலஞ்சென்ற பாலசுந்தரம் (றெஜீமென்றல் சார்ஜன் மேஜர்) செல்வமணி தம்பதிகளின் அருமை மருமகனும் மாதினியின் அன்புக் கணவரும் அம்சவி, அக்ஷவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிறேமா, பிறேமலா ஆகியோரின் ஆருயிர்ச் சகோதரரும் கணேசமூர்த்தி, கோடீஸ்வரன், காலஞ்சென்ற மகேந்திரன், மனோகரன், மாலதி, மனமோகன், கதிர்வேல், ஞானச்செல்வி, ஞானவேல், தங்கவேல் ஆகியோரின் அன்பு மைத்துனரும் புஸ்பலீலாவதி, காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் (நாதன்), புஸ்பராணி, புஸ்பநிதி, சிவஞானசுந்தரம் ஆகியோரின் உடன்பிறவாத சகோதரனும் கஜந்தி சாரங்கன், கஜந்தன், அர்த்தனி, அபிசயா, சங்கீதா, வேனுகானன், தியாகரூபன், காலஞ்சென்ற ஆதீசன், வாகீசன், விமலன், விபுலன், கோபிநாத், கோகுல்நாத், ராகுல்நாத், தக்சாயினி, துளசிகா, தர்மிகா, அனுஸ்ணவி ஆகியோரின் பாசமிகு மாமாவும் ராகவி, வைஷ்ணவி, கார்த்திகன், கயல்விழி, விரணவன், மலர்விழி, சர்மிளா, நிறோ, சாளினி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.05.2019) செவ்வாய்க்கிழமை St. John's Dixie Cemetery and Crematotium, 737, Dundas St E, mississauga, ONL4Y 2B5, Canada எனும் இடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**புஸ்பலீலாவதி - 077 314 4886,**
**புஸ்பராணி - 077 553 3092,**
**புஸ்பநிதி - 077 408 3937,**
**மனோகரன் - 077 923 5935,**
**மாலதி - 077 108 4524**

(CS 23656/15/17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### விற்பனைக்கு

Nissan Sunny B - 310 (1979) கார் விற்பனைக்கு (450,000) AC, Alloy Wheel, Body, Engine, Paint 100%, Carset, Good condition **077 174 6101**
**179, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.**

### காணி விற்பனைக்கு

கேணியடி பண்டத்தரிப்பில்
4 பரப்புகாணி விற்பனைக்குண்டு.
**077 616 2046** (CS/25160) (11,17)

### நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்

**சான்று பெற்ற பாடசாலை - அச்சுவேலி மற்றும் அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்லம் - கைதடி ஆகிய இல்லங்களுக்கான புதிய உலர் உணவுப் பொருள்கள் விநியோகமும் தொற்று நீக்கிப் பொருள்கள் விநியோகமும் - 2019/2020**
**கூறு விலை கோரல்**


| தொடர் இல | பெறுகை இல. | நிறுவனங்கள் | உத்தரவாத வைப்புப்பணம் ரூபா. |
|---|---|---|---|
| 01. | NP/30/02/05/Food-2019- 01 | அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்லம் - கைதடி | 50,000 |
| 02. | NP/30/02/05/Food-2019- 02 | சான்று பெற்ற பாடசாலையும் தடுப்பு காவல் இல்லமும் - அச்சுவேலி | 50,000 |

- விண்ணப்பப் படிவங்களினை 08.05.2019 - 21.05.2019 வரை அலுவலக நேரம் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 15.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.
- மேலதிக விபரங்களினை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- தொலைபேசி இல 021 222 8321

**தி.விஸ்வரூபன்**
தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு,
நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் வ.மா,
மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை,
யாழ்ப்பாணம்.
**தொலைபேசி :- 021-222-4782**

## மரண அறிவித்தல்கள்

### யேசுதாசன் மெண்டிஸ்



**பிறப்பு 28.09.1969**
**இறப்பு 21.04.2019**

யாழ். நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட யேசுதாசன் மெண்டிஸ் 21.04.2019 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற மிக்கேல் யேசுதாசன் மற்றும் அருள்மணி தம்பதியரின் மகனும், அரசு, டெய்சி, பாப்பா, வசந்தி, அன்ரன், பெரியராணி, சின்னராணி, வலன், றொபேட், சுதா ஆகியோரின் சகோதரனும், மரீனா, ராசா, அன்ரனிதாஸ், சுனீத்தா, சந்தரன், ஆல்டின், விஜயன், பிறின்சி, ஜெறின், ஜெகன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (07.05.2019) செவ்வாய்க்கிழமை பிரான்ஸ் பரிஸ் இல் மாலை 3 மணிக்கு (பிரான்ஸ் நேரப்படி) நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**

**78/11, கடற்கரை வீதி,**
**நாவாந்துறை.**

### மருதலிங்கம் மகேந்திரன்



யாழ்ப்பாணம் உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மருதலிங்கம் மகேந்திரன் 04.05.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதலிங்கம் - சின்னத்தங்கச்சி தம்பதிகளின் அன்பு மகனும், ஜெயமலரின் (மலர்) பாசமிகு கணவரும், கௌசிகா, சங்கீத்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், லலிதாம்பிகை, மனோரஞ்சிதம், அரியசோதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2019) திங்கட்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**லவ் லேன்,**
**உடுவில்.**

(CS/25161)(11,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 009 2958**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மனிதாபிமானத்தோடு நடந்துகொள்வோம்!

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டு வெடிப்புகள் மற்றும் படுகொலைகளைத் தொடர்ந்து ஏற்பட்ட சூழ்நிலைகளால் இலங்கையில் பாதிக்கப்பட்ட மற்றொரு தரப்பு வெளிநாட்டில்இருந்து வந்து இங்குதஞ்சமடைந்திருந்தவர்களாவர். பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பேர் வரையிலானோர் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறுகின்றன.

தத்தமது நாடுகளில் சிறுபான்மையினர்களான இவர்கள், அங்கு பெரும்பான்மையினரால் தொடர்ந்து அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கைக்கு வந்து தஞ்சமடைந்திருந்தனர். இவர்கள் அகமதியா என்கிற மதப்பிரிவைச்சேர்ந்தவர்கள். உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுவெடிப்புகளுக்கு முன்னர் வரைக்கும் எல்லாமும் நன்றாகவே சென்று கொண்டிருந்தன. நீர்கொழும்பு பகுதியில் வீடுகளை வாடகைக்குப் பெற்று இவர்கள் வாழ்ந்து வந்தனர். ஆனால், உயிர்த்த ஞாயிறு படுகொலைகளின் பின்னர் எல்லாமே தலைகீழாக மாற்றிவிட்டன.

அவர்களுக்கு வீடுகளைவாடகைக்குக்கொடுத்தஉரிமையாளர்கள் உடனடியாகத் தமது வீடுகளை விட்டு விலகுமாறு அவர்களை நிர்ப்பந்திக்கத் தொடங்கினார்கள். அது தவிர சில கும்பல்கள் அவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு மிரட்டியதாகவும் கூறப்படுகின்றது. அவர்கள் இருந்த வீடுகள்மீது கல்வீசப்பட்டதாகவும்கூறப்படுகின்றது. இதனால் அச்சமடைந்தஇந்தமக்களில்சுமார்650பேர்நீர்கொழும்பில் உள்ள பள்ளிவாசல் ஒன்றில் தஞ்சமடைந்திருந்தனர். மற்றவர்கள் பொலிஸ் நிலையங்களிலும் உள்ளூர் பாடசாலைகளிலும் ளதஞ்சமடைந்திருந்தனர். ஈரானியர்கள் 30 பேர் வரையில் வீடுகளைவிட்டு வெளியேறாமல் உள்ளேயே அடைந்து கிடக்கிறார்கள் என்றும் கூறப்பட்டது.

இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள மக்களைத் தொடர்ந்தும் நீர்கொழும்பில் வைத்திருப்பது ஆபத்து என்று கருதிய கொழும்பு ஆட்சியாளர்கள், அவர்களைஏனைய மாகாணங்களுக்கும் பிரித்து அனுப்புவதற்குத் தீர்மானித்திருப்பதாக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கடந்த வாரம் தெரிவித்திருந்தார். அப்படி அவர்கள் வடக்குக்கும் அனுப்பப்படும்போது அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டியது எமது கடமை என்றும் தெரிவித்திருந்தார். உலகம் முழுவதும் அகதிகளாக அலைந்து திரிந்த, திரிந்து கொண்டிருக்கின்றவர்கள் என்ற நிலையில் தமிழர்கள் இந்த விடயத்தில் பரிவோடு நடந்துகொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார்.

ஆனால், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரானைச் சேர்ந்த அந்த மக்களை வவுனியாவில் தங்க வைப்பதற்காக அழைத்து வந்தபோது அங்கு கடும் எதிர்ப்புக் காட்டபட்டதன் அடிப்படையில் வேறு மாவட்டத்துக்கு அவர்களை இடம்மாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

உண்மையில் அவ்வாறு நடந்திருந்தால் அது மனிதாபினமானமற்ற செயல். போராலும் கொடூரமான அரச அடக்குமுறைகளாலும் பாதிக்கப்பட்ட தமிழர்கள் அதுபோன்றே பாதிக்கப்பட்ட பின்னர் அகதிகளாக இலங்கைக்கு வந்திருப்பவர்களை ஏற்க மறுத்து புறமொதுக்க நினைப்பது மிக மிகக் கொடிய செயல்.

அது போன்று உலகின் பல நாடுகளும் சிந்தித்திருந்தால் இன்று புலம்பெயர் தமிழ்ச் சமூகம் என்கிற ஒன்றே இருந்திருக்காது. சிங்கள, பௌத்த தேசியவாதத்தால் தாம் நசுக்கப்பட்டபோது தமிழ் மக்களை ஏனைய நாடுகள் குறிப்பாக மேற்குலகநாடுகள் ஏற்க மறுத்திருந்தால் இன்று அவர்களின் கதி என்ன என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும்.

இன்று பல நாடுகளிலும் தமிழர்கள் தஞ்சமடைந்திருப்பது போலவே பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான் நாட்டு மக்களும் அகதிகளாக வடக்கில் தங்கி வாழ்வதைத் தமிழர்கள் ஆதரிக்கவேண்டும். அரவணைக்க வேண்டும்.

அதைவிடுத்து அவர்களை விரட்டியடிப்பதில் குறியாக நின்று செயற்படக்கூடாது. யாரோ சிலர் செய்த தவறுகளுக்காக கூட்டுத் தண்டனைக்கு அப்பாவி மக்களை உள்ளாக்குவது ஏற்கமுடியாதது. எனவே முழு மனதோடு அகதிகளை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

# நாட்டின் தலைவிதி மாறவே மாட்டாதா?



இந்துமதி

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை சகல இன மக்களையும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.

தேவாலயங்களில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களில் சிங்கள மக்கள் மட்டுமன்றித் தமிழ் மக்களும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் அனைவருமே கிறிஸ்தவர்கள் என்பதால் இந்த அவலத்தை எதிர்கொண்டார்கள்.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் இலங்கையில் நடத்திய தாக்குதல்கள் தெற்காசியா முழுவதிலும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக இலங்கையின் அண்டை நாடான இந்தியாவுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே முஸ்லிம் தீவிரவாதிகளால் அழிவுகளைச் சந்தித்து வரும் அந்த நாடு ஐ.எஸ்.ஐ.எஸ் இலங்கைக்குள் ஊடுருவியுள்ளதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளாது.

### முஸ்லிம் இனத்தவர்களை புறமொதுக்குதல் தகாதது!

தற்போது முஸ்லிம் இனத்தவர்களை மாற்று இனத்தவர்கள் சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்ற நிலமை ஏற்பட்டு விட்டது. முஸ்லிம் மக்கள் நாட்டின் பல பாகங்களிலும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். கிழக்கு மாகாணத்தில் பெருமளவில் வாழ்கின்ற இவர்கள் ஏனைய இடங்களில் பிற இனத்தவர்களுடன் கலந்து வாழ்வதைக்காண முடிகின்றது. குறிப்பாக தென் மாவட்டங்களில் சிங்கள இனத்தவர்களுடன் கலந்து வாழ்கின்றனர். இந்த நிலையில் முஸ்லிம் தீவிரவாதிகளின் தற்கொலைக் குண்டுதாரிகள் மேற்கொண்ட தாக்குதல்கள் இந்த இனத்தவர் மீது வெறுப்பையும் சந்தேகத்தையும் ஏற்படுத்திவிட்டது. இதனால் இவர்களது வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இது காலப்போக்கில் பெரும் வருமானப் பாதிப்பையும் ஏற்படுத்தக் கூடியது.

தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடியபோது தமிழ்மக்களும் இவ்வாறானதொருநிலைக்குள்தான் தள்ளப்பட்டிருந்தார்கள். தமிழர்கள் அனைவருமே புலிகளாகப் பார்க்கப்பட்டனர். அவர்களால் சுதந்திரமாக நடமாட முடியவில்லை. பெரும் அவமானங்களையும் அவர்கள் சந்தித்தனர். இன்று அந்த அத்தியாயம் மாறிக் காணப்படுகின்றது.

இதேவேளை தமிழ் சிங்கள இனத்தவரிடையே கலவரத்தை ஏற்படுத்திப் பெரும் அழிவுகளுக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ்அமைப்பினர் திட்டமிட்டுள்ளதாக மகிந்தவின் நெருங்கிய சகாவான விமல் வீரவன்ச கூறியிருக்கிறார். வழக்கமாக முரண்பட்ட அறிக்கைகளை வெளியிட்டு மக்களைக் குழப்புவதில் வல்லவரான அவர் தற்போது இவ்வாறு கூறியிருக்கிறார். ஒரு கொள்கையின் அடிப்படையில் தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடிய போது முஸ்லிம் மக்களின் ஆதரவு அதற்குக் கிடைக்கவில்லையென்ற கசப்புணர்வு தமிழ் மக்களிடம் காணப்பட்டது. சில வேண்டத்தகாத சம்பவங்கள் இடம்பெறுவதற்கும் இதுவே காரணமாக அமைந்துவிட்டது.

தற்போது ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையே இனக் கலவரத்தை ஏற்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாகப் புதுக்கதையொன்று புனையப்பட்டுள்ளமை ஒரு தரப்பினரின் சதிச் செயலெனவே கருத முடிகின்றது. மகிந்த தரப்பினருடைய அரசியல் இனவாதமே மகிந்த அணியில் இனவாதிகளே அதிகளவில் உள்ளனர். அவர்களில் விமல் வீரவன்ச ஒரு கடைந்தெடுக்கப்பட்ட இனவாதி ஆவார். இவர்களுக்கு மக்களின் மீது அக்கறையே இல்லை. தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக எதையும் செய்யக் கூடியவர்கள் இவர்கள். தமிழ் மக்கள் தென்பகுதி அரசியல் வாதிகள் தொடர்பாக சரியாகக் கணித்து வைத்திருக்கின்றனர். கடந்த காலங்களைப் போன்று இனியும் அவர்கள் ஏமாறுவதற்குத் தயாராகவில்லை என்பதும் தெளிவாகத் தெரிகின்றது. கடந்த அரச அதிபர் தேர்தலில் மைத்திரிக்கு வாக்களித்து அவர்கள் எதைக் கண்டார்கள்?


“தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடியபோதுதமிழ் மக்களும் இவ்வாறானதொரு நிலைக்குள்தான் தள்ளப்பட்டிருந்தார்கள். தமிழர்கள் அனைவருமே புலிகளாகப் பார்க்கப்பட்டனர். அவர்களால் சுதந்திரமாக நடமாட முடியவில்லை. பெரும் அவமானங்களையும் அவர்கள் சந்தித்தனர். இன்று அந்த அத்தியாயம் மாறிக்காணப்படுகின்றது.”

தமிழர்களைப் பகடைக் காய்களாகவே ஆட்சியாளர்கள் நினைக்கின்றனர். கடந்த நவம்பர் மாதம் மட்டக்களப்பில் உள்ள வவுணதீவில் இரண்டு காவல்துறையினர் இனம் தெரியாதவர்களால் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாக முன்னாள் போராளி ஒருவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டார். தற்போது பொலிஸாரைக் கொன்றது முகமது ஸஹ்ரான் குழுவினர் எனத் தெரியவந்துள்ளது. பொலிஸார் உரிய விசாரணைகளை முழுமையாக மேற்கொள்ளாது எழுந்தமானமாக அந்த முன்னாள் போராளியைக் கைது செய்தமை மிகப்பெரிய தவறு என்பது தற்போது நிரூபணமாகியுள்ளது. தமிழர்கள் என்பதால் எதை வேண்டுமானாலும் எப்படியும் செய்யலாமென்பது இந்தநாட்டின் தலைவிதியாகவே மாறிவிட்டது. அந்த முன்னாள் போராளியின் மனைவி தமது நான்கு பிள்ளைகளுடன் வீதியில் அமர்ந்து போராடும் அளவுக்கு நிலைமை மோசமாகிவிட்டது.

### பொலிஸாரின் கொலை தொடர்பில் உரிய விசாரணை இடம்பெறவில்லை

பொலிஸாரைக் கொலை செய்ததாகக் கூறி ஓர் அப்பாவியைக் கைதுசெய்து சித்திரவதைகளுக்கு உள்ளாக்குவது ஒருபோதுமே மன்னிக் முடியாத மிகப் பெரியகுற்றமாகும். அந்தப் பொலிஸாரின் கொலைகள் தொடர்பாக சரியான கோணத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் நாட்டில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களைத் தவிர்த்திருக்க முடியும். பல அப்பாவிகளின் உயிர்களைப் பாதுகாத்திருக்க முடியும். நாடு கடும் அச்சுறுத்தலை எதிர்கொண்ட நிலையிலும் அரசியல்வாதிகள் ஒருமீது மற்றவர் சேற்றை அள்ளிப் பூசுவதிலேயே குறியாக இருக்கின்றனர். இவர்களின் இந்த இழி செயலை மக்கள் இனியும் பொறுத்துக் கொள்ளப் போகிறார்களா? நாட்டின் தலைவிதி மாறவே மாட்டாதா?

# அட்சய திருதியை பொன் நாளாகும் நன்நாள்



அட்சய என்ற சொல் வளர்தல் என்று பொருள்படும். சயம் என்றால் கேடு. அட்சயம் என்றால் கேடில்லாத அழிவில்லாத பொருள் என்பதாம். அன்றைய தினத்தில் நாம் செய்யும் எச்செயலும் குறைவின்றி வளர்ந்துகொண்டே இருக்கும். திருதியை தினத்தில் செய்யும் எச்செயலுக்கும் விருத்தி உண்டு என்ற பழமொழியும் உண்டு. ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதம் அமாவாசைக்குப் பின்வரும் மூன்றாம் பிறை நாளான திருதியை தினத்தை அட்சய திருதியை நாளாகக் கூறுவர். அன்றைய தினத்தில் இறை வழிபாடு பன்மடங்கு உயர்வைத் தரும். தங்கம், வெள்ளி போன்ற பொருள்கள் சேர வேண்டும் என்றால் அட்சய திருதியை நாளில் வாங்கினால் வளமுடைய வாழ்வைப் பெறலாம் என்பது ஐதீகம். அன்று விலையுயர்ந்த பொருள்கள்தான் வாங்கவேண்டும் என்பதில்லை. அன்றைய தினம் ஹோமம், ஜபம் மற்றும் தானம் செய்வது சிறப்பைத் தரும். பொன், வெள்ளி, குடை, விசிறி, ஆடை, நீர்மோர், பானகம், காலணி, மல்லிகைப் பூ, உத்ராட்சம், புத்தகம், பேனா, பென்சில் போன்ற பொருள்கள், தயிர் சாதம், போர்வை அல்லது பாய் போன்ற பதினாறு வகை தானங்களைச் செய்வது பல மடங்கு புண்ணியத்தை அளிக்கும் என்பது நம்பிக்கை. பரசுராமரின் பிறந்த நாளாகவும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது. பரசுராமர் திருமாலின் பத்து அவதாரங்களில் ஒன்றாகவும் கருதப்படுகிறார். இதிகாசங்களின்படி இந்த நாளில் திரேதா யுகம் தொடங்கியது. பகீரதன் தவம் புரிந்து புனித கங்கை நதியை சொர்க்கத்தில் இருந்து பூமிக்கு வரவழைத்தது இந்த நாளில்தான் என்றும் கூறப்படுகிறது. தீர்த்தங்கரர்களுள் ஒருவராகிய ரிஷபதேவரின் நினைவாக இந்த நாள் சமணர்களால் கொண்டாடப்படுகிறது.

**அட்சய திருதியை மகிமை**

குபேர பகவான், ஒரு அட்சய திருதியை நன்னாள் அன்று இறைவனை வணங்கித் துதித்தார். அதன் பயனாக இறைவன் இவரை வடதிசைக்கு அதிபதியாக்கி சங்கநிதி, பதுமநிதி, கச்சநிதி, கற்பநிதி, நந்தநிதி, நீலநிதி, மகாநிதி,

(11ஆம் பக்கம் பார்க்க)

நகைப் பிரியர்களின் நந்தவனம்
உதயா ஜுவல்லர்ஸ்



அக்ஷய திருதியை
07.05.2019

பொன் சேரும் பொன்னான நன் நாளாம்
அக்ஷய திருதியை உங்கள் எண்ணம் போல்
தரம், நம்பிக்கை, நவநாகரிகத்திற்கு ஏற்ப
அழகிய டிசைன்களில் நகைகளை
உதயா ஜுவல்லர்ஸிடம்
பெற்று மகிழ்ந்திடுங்கள்

அன்றைய தினம் கொள்வனவு செய்யும்
வாடிக்கையாளர்களுக்கு பெறுமதிமிக்க
அன்பளிப்பு பொருட்கள் வழங்கப்படும்

4 பேர் குலுக்கல் மூலம் தெரிவு
செய்யப்படும் அதிர்ஷ்டசாலிகளுக்கு

1ஆம் பரிசு 2 பவுண் தங்கக்காசு
2ஆம் பரிசு 1 1/2 பவுண் தங்கக்காசு
3ஆம் பரிசு 1 பவுண் தங்கக்காசு
4ஆம் பரிசு 1/2 பவுண் தங்கக்காசு



தரம் மாறாத
தங்க நகைகளுக்கு
வரம்போல் ஓர் இடம்

உதயா ஜுவல்லர்ஸ்
79 G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 4434, 021 221 6877


வெஸ்ரன் ஜுவல்லர்ஸ்
வெஸ்ரன்
ஜுவல்லர்ஸ்
செல்வம் பெருகிடும்
அட்ஷய திருதியை
தங்கத் திருநாள்
வாழ்த்துக்கள்.
Western
Jewellerss
ஐஸ்வர்யங்களை அள்ளித்தரும் அட்ஷய திருதியை
திருநாளான நாளை 07.05.2019 எம்மிடம்
தங்க நகைகளை கொள்வனவு செய்யும்
அனைத்து வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும்.
மேலும் அன்றைய தினம் தங்கத்தினை கொள்வன்வு
செய்யும் வாடிக்கையாளர்களில் குலுக்கல் முறையில்
தெரிவு செய்யும் 5 வாடிக்கையாளர்களுக்கு
தங்கப்பவுண் பரிசாக வழங்கப்படும்.
இல.81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6916
ஒரு முறை விஜயம் செய்யுங்கள் மீண்டும் மீண்டும் வரத்தூண்டும்.
எம்மிடம் தங்க நகைகளை மிகவும் துல்லியமாக
தரம் பார்த்து சான்றிதளைப் பெற்றுக்கொள்ளலாம்


அனைவருக்கும் பொன் பெருகும் அக்ஷய திருதியை திருநாள் வாழ்த்துக்கள்
VMK JEWELLERY
VMK JEWELLERY
நியூ வீ.எம்.கே ஜுவல்லறி
60 வருடங்களுக்கு மேலாக
வட மாகாணத்தில் திருமண
வைபவங்களுக்கு கலைநயத்துடன்
கூடிய டிசைன்களில் தங்க நகைகளை
உங்களுக்கு ஏற்ற விதத்தில்
வடிவமைத்து கொடுக்கும்
கைராசியான ஸ்தாபனம்
வீ.எம்.கே ஜுவல்லர்ஸ்
V.M.K JEWELLERS
நியூ
வீ.எம்.கே
ஜுவல்லர்ஸ்
குறையாத செல்வத்தை வாளமாக அள்ளித்தரும் அதிசய திருநாளாம்
அட்சய திருதியை நாளை 07.05.2019 வருகின்றது. இத்திருநாளில்
உங்கள் வாழ்வில் சுபீட்சத்தை உருவாக்கும் பெறுமதிமிக்க நகைகளை
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீ.எம்.கே ஜுவல்லரியில்
கொள்வனவு செய்து என்றும் அழியா செல்வத்தைப் பெறுங்கள்.
அன்றைய தினம் கொள்வனவு செய்யும் தங்க நகைகளுக்கு
விசேட அன்பளிப்புக்கள் வழங்கப்படவுள்ளன.
கண்டி வீதி, சாவகச்சேரி.
021 227 1616 / 077 7849 369
80/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2515

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)



அட்சய திருதியை நாளில் இறை வழிபாடு பன்மடங்கு உயர்வைத் தரும். தங்கம், வெள்ளி போன்ற பொருள்கள் சேர வேண்டும் என்றால் அட்சய திருதியை நாளில் வாங்கினால் வளமுடைய வாழ்வைப் பெறலாம் என்பது ஐதீகம்.

முகுந்த நிதி, மகாபத்மநிதி என்னும் நவநிதிகளையும் அளித்து அழகாபுரி என்னும் குபேரபுரியை ஆளும் அருளை வழங்கினார்.

வெறும் கையுடன் தன் நண்பன் கண்ணனைக் காணச் செல்லக் கூடாது என்றெண்ணி, இருந்த ஒரு பிடி அரிசியை அவலாக்கி, அதனை சுத்தமான கிழிசல் துணியில் கட்டிக்கொண்டு சென்றார் குசேலர். ஆர்வமாய் கிருஷ்ணர் அதனைப் பெற்றுக்கொண்டு, அவலை வாயில் இடும்போது அட்சய என்றார். நண்பனிடம் விடைபெற்று, தன் இல்லம் திரும்பிய குசேலர், தன் இல்லத்தைக் காணாது தேடினார்.

அது மாளிகையாக மாறிவிட்டிருந்தது. செல்வச் செழிப்புடன் இருந்த மனைவியைக் கண்டு வியந்தார். இந்த வளங்கள் யாவும் கிருஷ்ணர் கூறிய அட்சய என்ற சொல்லால் விளைந்தன. குசேலர் செல்வ வளமிக்கவரானார்.

இன்றைய நாளில் கிருஷ்ண பரமாத்மாவுக்கு அவல் படைத்து, பூஜை செய்தால் அஷ்டலட்சுமி கடாட்சம் கிடைக்கும் என்பது நம்பிக்கை. இறைவனுக்குச் செய்யப்படுகிற நிவேதனம், பூஜை ஆகியவை வளத்தையும் நலத்தையும் தரும்.

**திரௌபதியைக் காப்பாற்றிய அட்சய பாத்திரம்**

பஞ்ச பாண்டவர் வனவாசத்தின்போது சூரிய பகவான் அவர்களுக்கு ஒரு அட்சய பாத்திரம் கொடுத்தார். அள்ள அள்ளக் குறையாது உணவளிக்கும் இந்தப் பாத்திரத்துக்கு அமுத சுரபி என்ற பெயரும் உண்டு. இப்பாத்திரத்தை திரௌபதி ஒரு நாளுக்கு ஒரு முறைதான் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது விதி. உணவு உண்ட பிறகு அதனைக் கழுவிக் கவிழ்த்துவிடுவார்.

ஒரு நாள் உணவு வேளை கழித்து, துர்வாசர் தன் சீடர்களுடன் வருகிறார். தான் உணவருந்தப் போவதாகவும், அதற்கு முன் ஆற்றில் குளித்துவிட்டு வருவதாகக் கூறிச் செல்கிறார். துர்வாச முனிவரின் கோபத்துக்கு ஆளாக நேருமோ என்று அஞ்சி, செய்வதறியாது தவிக்கும் திரௌபதி, உதவிக்கு கிருஷ்ணனை வேண்டுகிறாள். மனமிரங்கிய ஆபத்பாந்தவன், அட்சய பாத்திரத்தைக் கொண்டு வரப் பணித்து, அதில் ஒட்டிக் கொண்டிருந்த கீரையை அட்சயம் என்று கூறி உண்டார். நீராடிவிட்டு வந்த துர்வாசர் தனக்கு பசியில்லை என்று சொல்லிவிட்டுத் தன் வழியே சென்றுவிட்டார்.



வாடிக்கையாளர் அனைவருக்கும் செல்வம் பெருகிடும் அக்ஷய திருதியை திருநாள் வாழ்த்துக்கள்

50 வருடங்களுக்கு மேலாக யாழ் குடாநாட்டு மக்களின் நன்மதிப்பைபெற்ற உங்கள் அபிமான



மைதிலி நகைமாடம் (தனியார்) நிறுவனம்

Maithily Nakai Maadam (Pvt) Ltd




நிகழும் மங்களகரமான விகாரி வருஷம் சித்திரை மாதம் 24ம் நாள் (07.05.2019) செவ்வாய்க்கிழமை அட்ஷய திருதியை என்னும் பொன்னான நாள் வருகின்றது. "அட்ஷயம்" என்றால் வளர்வது, குறையாதது என்று பொருள். அன்றைய தினத்தில் ஆரம்பிக்கின்ற வேலைகள் வெற்றிகரமாக நடக்கும், நல்ல பயனைத் தரும் என்பது வேத வாக்கு. ஒவ்வொரு யுகத்திலும் அட்ஷய திருதியை நாளானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. பெருமாளுக்கே கடன்கொடுத்த குபேரன் லட்சுமி தேவியை வணங்கி செல்வத்தைப் பெற்றது இந்நாளில்தான். இதே போன்ற ஏராளமான நிகழ்வுகள் அட்ஷய திருதியை நாளில் தான் நிகழ்ந்துள்ளன. அன்றைய தினத்தில் லட்சுமிதேவி வகிக்கும் தங்கம், வெள்ளி போன்ற பொருட்களை கொள்முதல் செய்து சௌபாக்கியம் குறையாது வாழ்வின் அதிர்ஸ்டத்தை உங்கள் ஒவ்வொரு இல்லத்துக்கும் எடுத்துச் செல்ல தவறாதீர்கள்.

**அன்றைய தினத்திற்கான விசேடசலுகைகள்:**

- அதி நவீன டிசைனுக்கேற்ப நம்ப முடியாத விலைக் கழிவுகள் வழங்கப்படும்.
- பழைய நகைகளைக் கொடுத்து நகை வாங்குவோருக்கு அன்றைய பவுண் விலைக்கே எடுக்கப்படும்.
- குறிப்பிட்ட நகைகள் தங்க விலைக்கே சேதாரம் இல்லாமல் வழங்கப்படும்.
- நகைகள் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் அதி விசேட பரிசுகள் காத்திருக்கின்றது.



யாழ் மைதிலி ஜுவல்லர்ஸ்

89V கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 7902 79 Z, Sea Street, Colombo-11. Tel: 2396239.

அட்ஷய திருதியை
07.05.2019

AKSHAYA TRITIYA

அழகிய நவீன சிங்கப்பூர் நகைகளுக்கு

# சிங்கப்பூர் ஜுவல்லறி

# Sinkapoore Jewellery



நிகழும் மங்கலகரமான விகாரி வருடம் சித்திரை மாதம் (07.05.2019) செவ்வாய்க்கிழமை அக்ஷய திருதியை என்னும் பொன்னான நாள் வருகின்றது. இத் தினத்தில் நீங்கள் வாங்கும் நகைகள் என்றும் உங்கள் வாழ்க்கையில் நிலைத்து நிற்கும். இத்தினத்தில் தங்க நகைகளை கொள்வனவு செய்து அழியா செல்வத்தை பெற்றிட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அக்ஷய திருதியையன்று நகைகளை கொள்வனவு செய்யும் அனைத்து அன்பான வாடிக்கையாளர் அனைவருக்கும் அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்படும்.

குறையாத செல்வத்தை வளமாக அள்ளி வழங்கும்பொன்னான திருநாள்
அட்ஷய திருதியையன்று சொந்தமாக்கிடுங்கள்
சிங்கப்பூர் ஜுவல்லறியின் தங்க நகைகளை

021 4590 260 / 021 222 3327

இல.28. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

No.28, Kasthuriar Road,
Jaffna.

இந்த பொன்னான நாளை மேலும் அழகாக
கன்னிஹாவுடன் கொண்டாடுங்கள்



# KANNIHA JEWELLS

"அக்ஷய திருதியை" முன்னிட்டு புத்தம் புதிய டிசைன்கள், அதிக ரகங்கள் என தங்கத்தில் விழாக்கோலம் பூண்டுள்ளது உங்கள் கன்னிஹா. வியப்பூட்டும் சலுகைகள் சிறப்பு பரிசுகள் மற்றும் சிறப்புக் கொள் முதல் திட்டங்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன. இந்த அக்ஷய திருதியை நன் நாளில் உங்கள் வாழ்க்கை புதுப்பொலிவோடு ஜொலிக்க கன்னிஹாவின் வாழ்த்துக்கள்.

இவை மட்டுமல்லாது உங்கள் பழைய தங்க ஆபரணங்களை அன்றைய தினத்துக்குரிய தங்க விலைக்கு வழங்கி அதற்குப் பதிலாக புத்தம் புதிய ஆபரணங்களைப் பெற்றுக்கொள்ளும் அரிய வாய்ப்பும் இத் தினத்தில் உங்களுக்காக காத்திருக்கின்றது.





மங்களம் பொங்கும் அக்ஷய திருதியை தினத்தை முன்னிட்டு வைகாசி 07ஆம் திகதி அன்று 7.31 முதல் இரவு 8.00 மணி வரை எமது காட்சியறை உங்களுக்காகத் திறந்திருக்கும்.

குறையாத ஐஸ்வரியத்தை அள்ளித்தரும் அக்ஷய திருதியை தினத்தில் தங்கநகைகளை கொள்வனவு செய்து என்றும் குறையாத இன்பத்தைப் பெற்றிடுங்கள்

# கன்னிஹா ஜுவல்ஸ்

Dealers in 22 Ct, Gold, Jewelleries
Gems & Jewellers

இல.99E, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

021 222 4448

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய அக்ஷய திருதியை வாழ்த்துக்கள்

அக்ஷய திருதியை
07.05.2019



நகைப் பிரியர்களின் நந்தவனம்

# லலிதா ஜுவல்லறி

சித்திரை மாதம் சுக்லபட்ச திருதியை அக்ஷய திருதியை நாளாகக் கொண்டாடுவது யாவரும் அறிந்த ஒன்று. அக்ஷய திருதியை அன்று நாம் செய்யும் எந்தக் காரியமும் வளர்ந்து கொண்டே இருக்கும். பெருகிக் கொண்டேயிருக்கும் என்பது திண்ணம். இத்தகைய சிறப்பு மிக்க **அக்ஷய திருதியை தினத்தன்று** எமது வாழ்வின் தேவைகளில் ஒன்றாக விளங்கும் தங்கத்தை தங்களின் வசதிக்கேற்ப பெரியதோ, சிறியதோ வாங்கி என்றும் வற்றாத செல்வத்துடன் வாழ தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.



அன்றைய தினம் தங்கத்தினை கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதிமிக்க அன்பளிப்பு பொருட்கள் காத்திருக்கின்றன.

நாளை (07.05.2019) காலை 7.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை எமது நிறுவனம் திறந்திருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

தரம் மாறாத
தங்க நகைகளுக்கு
வரம்போல் ஓர் இடம்

முக்கிய குறிப்பு:
அக்ஷய திருதியை தினத்தன்று
ரூபா 100,000 இற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு அதிவிஷேட அன்பளிப்பும்
ரூபா 50,000 இற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு விஷேட அன்பளிப்பும்
வழங்கப்படும்.

எமக்கு வேறு எங்கும் கிளைகள் கிடையாது

லலிதா ஜுவல்லறி
இல.L.75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2863/ 076 6183 302

# மங்கயக்கரசியார் குருபூசை தினம்

கந்தையா கனகசபை

அறுபத்து மூன்று நாயன்மார்களில் "மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்" எனப் பெரியபுராணத்தில் போற்றப்படும் மங்கையர்க்கரசியார் குருபூசைத் தினம் நாளை செவ்வாய்கிழமை நடெங்கிலும் கொண்டாடப்படுகின்றது. பெரியபுராணத்தில் மட்டுமே 63 நாயன்மார்களின் பக்திச் சுவையை தலைமைச் சுவையாகக் காட்டி காப்பிய நிலைக்கு உயர்ந்துள்ளது. திருஞான சம்பந்தரால் புகழ் பெற்ற பாண்டிமாதேவி ஆகிய மங்கையர்க் கரசியார்.

"மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வம்
வனவர் திருக்குலக் கொழுந்து வளைன்னைமானி
செங்கமலத் திருமடத்தை கன்னி நாடான்
தென்னர்குலப் பழி தீர்த்த தெய்வப் பாவை
எங்கள் பிரான் சண்பையர் கோன் அருளினாலே
இருந்தமிர் நாடுந்த இடர் நீக்கித் தங்கள்
பொங்கொளி வெண் திருநீறு பரப்பினாரைப்
போந்துவார் கழலென்பால் போந்தலாமே"

"மங்கையர்குத் தனியரசி எங்கள் தெய்வம்"எனச் சேக்கிழார் பெருமாள் கூறியதில் "தனியரசி" என்பதால் மங்கையருள் ஒப்புயர் வந்தவர் என்பதும் என் தெய்வம் என்றும் போற்றாது எங்கள் தெய்வம் என்று உளப்பாட்குத் தன்மைப் பன்மையில் கூறியமையால் வருங்கால அடியார்கள் கூட்டத்தையும் ஊய்விக்கும் பேறுபெற்றவர் தமது அரசியார் என்பதும் தெளிவாகின்றது.

"வளக்கை மானி" என்று பெண் அணியில் சிறந்த வளையல் போற்றப் பெற்றமை சிறப்புடையதாகும். இதனாலே திருஞான சம்பந்தப்பெருமானும் திருவாலவாய்த் தேவாரத்தில்
"மங்கைர்க்கரசி வளவர் கோன் பாவை
வரிவளைக் கைமட மானி"

என்று போற்றினார். தன்னிலைமையில் தாழாமையும் தனக்கூழ் விளையால் தாழ்வு வந்த காலத்தில் உயிர் வாழாமையுமாகிய மானம் அம்மையாரிடம் பொதித்துக் கிடந்தமை புலனாகின்றது.

தன் கணவன் மாறவர்மன் அரிகேசரி சைவசமயத்தை விடுத்து, சம்பளத்தைத் தழுவி, மனதாலும், உடலாலும் கூன் உடையவனாக இருந்தான். இந்த நிலையில் பாண்டிமாதேவி, தான் சைவ சமயத்தை விட்டு நீங்காமல் தன் நாட்டையும் தன் கணவனையும் அமைச்சர் குலச்சிறையாரின் துணையுடன் திருஞானசம்பந்தப் பெருமானை வரவழைத்துச் சைவத்துக்கு மாற்றுகிறார். அரசின் விருப்பப்படி திருஞானசம்பந்தர் சமனர்களை வென்று திருநீற்றின் மகத்துவத்தை உலகோர்க்குக் காட்டினார். உலக மக்களுக்குக் கோளறு பதிகத்தின் மூலம் நாளும் கோளும் நல்வர்க்குத் தீயது இல்லை என்பதும் "சிவாய நம" என்பார்க்கு அபாயமில்லை" என்ற சிவநாமத்தின் பெருமையும் உணர்த்தப்பட்டது. மங்கையர்கரசியாரால் பாண்டி நாட்டில் சமனம் ஒழிந்து சைவம் தழைத் தோங்கியது.

தான் பிறந்த குடியில் கடைப்பிடித்து வந்த சைவ வாழ்வுக்குத் தாழ்வு வராமல் காத்தபெருமாட்டி இந்த அம்மையார். அம்மையாருடைய தோற்றம் தமிழகத்திலே புறச்சமய இருளை நீங்கிச்சைவ ஒளியைப் பரப்பியது என்றால் மிகையாகாது. கணவன் தவறான வழியில் சென்றவிடத்து மனம் துவண்டு விடாமல் மதியூக மந்திரியாகத் திகழ்ந்து. மன்னனையும் மக்களையும் நாட்டின் பெருமையையும் காப்பாற்றிய அம்மையார் சித்திரை ரோகினி நட்சத்திடத்திலன்று முத்தியடைந்தார். அவர் காட்டிய வழியிலே சைவ மக்களாகிய நாம் சென்று சைவசமயத்தைப் பேணிப் பாதுகாப்பதே நாம் அம்மையாருக்குச் செய்யும் கைமாறாகும்.










# கிழக்கு ஆளுநருடனான சந்திப்பை புறக்கணித்த தமிழ்க் கூட்டமைப்பு

மட்டக்களப்பு, மே 6

குண்டு வெடிப்புக்கள் ஏற்பட்டு இரண்டு வாரங்களேயாகும் நிலையில், கிழக்கு மாகாண ஆளுநர் வைபவ ரீதியான சந்திப்புக்காக மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களை அழைத்தபோதும் அதில் கூட்டமைப்பினர் கலந்துகொள்ளவில்லை.

அதில் ஏன் கலந்துகொள்ளவில்லையென்பதனை கூட்டமைப்பின் மாகாண முன்னாள் உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் ஊடக சந்திப்பில் விளக்கிய தோடு பல காரணங்களையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

இந்தச் சந்திப்பு உத்தியோகபூர்வ சந்திப்பு ஒன்றுக்கு மேலதிகமான ஒன்றாக மெருகூட்டப்பட்டுள்ளது. உத்தியோகபூர்வ சந்திப்பு எனினும் இது மாகாண சபைமண்டபத்தில் அல்லது ஆளுநர் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கலாம். உவர்மலை "வெல்கம் ஹோட்டலில்", மதிய உணவுடனான சந்திப்பு என்பது இதனை வைபவ ரீதியான விழா ஒன்றாக மாற்றியுள்ளது. மக்கள் மனதிலே குடிகொண்டுள்ள சோகம் தனியாத நிலையிலே இவ்வித சந்திப்பொன்றில் கலந்து கொள்வதை கிழக்கு மாகாணசபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் உறுப்பினர்களான நாங்கள் தவிர்த்துக் கொள்வதாகத் தீர்மானித்துள்ளோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். இந்தவிடயம் தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்புக் காரியாலயத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

பின்வரும் காரணங்களும் இந்தத் தீர்மானத்துக்கு வலுச்சேர்ப்பதாக உள்ளன. புதிய அரசமைப்புச் சட்டத்துக்குப் பல விடயங்களை எமது கட்சி முன்மொழிந்துள்ளது. ஆளுநர்கள், அரசியல்வாதிகளாக இருக்கக் கூடாது என்பதும் அதில் ஒன்று. இது இடைக்கால அறிக்கையிலே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், கிழக்கு மாகாணத்தில் முதன்முறையாக அரசியல்வாதியான ரோஹித போகொல்லாகம ஆளுநராக நியமிக்கப்பட்டார். அவர் இந்த மாகாணத்தைச் சேர்ந்தவராக இல்லாதிருந்தமையால் அதுபற்றி நாங்கள் அதிக அக்கறை கொள்ளவில்லை. ஆனால் தற்போதைய ஆளுநர் இந்தமாகாணத்தைச் சேர்ந்தவராக உள்ளார்.

**தீர்வை எதிர்த்தவர்**

சந்திரிக்கா அம்மையாரின் முதலாவது ஆட்சிக் காலத்தில் "பிராந்தியங்களின் ஒன்றியம்" என்ற அடிப்படையிலான அரசியல்வரைபுஒன்று ஆக்கப்பட்டது. இதனை உருவாக்குவதில் அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் ஒத்துழைத்தது. எனினும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த இன்றைய ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா அவரது தலைவரையும், இந்தத்தீர்வுத் திட்டத்தையும் எதிர்த்து மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பகுதிகளில் ஒருநாள் ஹர்த்தால் கடைப்பிடிக்கச் செய்தார். இது தமிழ்பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிரான ஹிஸ்புல்லாவின் செயற்பாடு.

**முறையற்ற செயல்**

ஓட்டமாவடியில் அமைந்திருந்த தமிழ் மக்களின் பொதுமயானத்தையும், அதற்குச் சேர்ந்த காணிகளையும் முறையற்ற வழிகளைக் கையாண்டு கையகப் படுத்துவதிலே முன்நின்று உழைத்தார். அந்த இடங்களில் தான் தற்போதைய ஓட்டமாவடிப் பிரதேச செயலகமும், நூலகமும் அமைந்துள்ளன. இந்த விடயத்தை அவர் தானே செய்ததாக அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிடுகின்ற காணொலி வலைத்தளங்களில் வேகமாகப் பரப்பப்பட்டு வருகின்றது.

**இந்துக் கோவிலை உடைத்து சந்தை அமைப்பு**

வேறொரு காணொலியில், ஓட்டமாவடியில் அமைந்திருந்த இந்துக் கோவிலை இடித்து அதிலே சந்தையொன்றை அமைத்ததாகவும் இது தொடர்பாக அன்றைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடுமையாக எதிர்த்த போதிலும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் என்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்தக் காரியத்தைச் செய்து முடித்தார் என்றும் அவரரே கூறுகின்றார்.

வேறொரு காணொலியில் வழக்கின் தீர்ப்பைச் சாதகமாகப் பெறுவதற்காக நீதிபதியையே மாற்றினேன் என்றும் அவரே குறிப்பிடுகின்றார்.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை இராணுவமே முகங்கொடுத்ததென்றும் முஸ்லிம்கள் ஆயுதம் தூக்கவில்லை என்றும் ஹிஸ்புல்லா உள்ளிட்ட முஸ்லிம் அரசியல்வாதிகள் கூறுகின்றனர்.

எனினும், காணொலியில், தானே ஆயுதம் ஏந்தி முஸ்லிம் இளைஞர்களோடு நின்று முஸ்லிம் கிராமங்களைப்பாதுகாத்தேன் என்று ஆளுநர் ஹிஸ்புல்லா குறிப்பிடு கின்றார்.

இரத்த ஆறு ஓடும் என்று அவர் பாவித்த வாசகமும் மீண்டும் மீண்டும் அதனை உறுதிப்படுத்தவதும் இளைஞர்களை வன்முறையின் பால் ஈர்க்கும் வகையிலான ஒன்றாகவே அமைகின்றது.

**வன்முறைகளுடன் தொடர்பு?**

கடந்த 21ஆம் திகதி குண்டுத் தாக்குதல்களின் பின்னர் வெளிவந்து கொண்டிருக்கின்ற ஐ.எஸ்.ஐ.எஸ். தொடர்பான பல்வேறு செய்திகள் கிழக்கு மாகாண ஆளுநர் அந்தச் சம்பவங்களுடன் தொடர்பு படுத்தப்படுகின்றார். இந்த விடயம் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். இனங்களுக்குள்ளே துவேச உணர்வைத் தூண்டிக் கொண்டிருக்கின்ற ஒருவராகவே இவர் அடையாளப்படுத்தப் படுகின்றார்.

இந்த விடயங்களைக் கருத்திற்கொண்டே கிழக்கு மாகாண ஆளுநர் நேற்று முன்தினம் விடுத்த அழைப்பை நிராகரித்துள்ளோம்.

கிழக்கு மாகாணத்தில் சுமுக நிலைமையையும், சமூக நல்லுறவையும் பேணிப் பாதுகாக்குமாறு வேண்டுகோள் விடுக்கும் அரசதலைவர் இந்த விடயங்களைக் கவனத்தில் எடுத்து கிழக்கு மாகாணத்தின் தற்போதைய தலைமை நிர்வாகியான ஆளுநர் தொடர்பில் தீர்க்கமான முடிவு ஒன்றை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் விவசாய அமைச்சர் கி.துரைராசசிங்கம், முன்னாள் பிரதித் தவிசாளர் பி.இந்திரகுமார், கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான மா.நடராசா, இரா.துரைரெத்தினம், கோ.கருணாகரம், கலையரசன், இராஜேஸ்வரன், ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (கு-46)

# குண்டுத் தாக்குதல்களுக்கு வன்மையான கண்டனம்

## திருகோணமலை மாவட்ட முஸ்லிம் சிவில் அமைப்புக்களின் ஒன்றியம்

மூதூர், மே 6

கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் நட்சத்திர ஹொட்டல்களில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களை வன்மையாகக் கண்டிப்பதாக திருகோணமலை மாவட்ட முஸ்லிம் சிவில் அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கிண்ணியா பொது நூலக மண்டப கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஒன்றியம் மேலும் தெரிவித்ததாவது:

தாக்குதலில் உயிரிழந்த சகோதர உறவுகள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். காயமடைந்து துயருற்றிருக்கும் அனைவரினதும் உடல், உள ஆரோக்கியத்துக்கும் இறைவனிடம் பிரார்த்திக்கிறோம்.

மனித குலத்துக்கு எதிரான இந்தக் கொடூர தாக்குதலை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. மதங்களும் அதன் போதனைகளும் கொலைகளையும், தற்கொலைகளையும் ஒருபோதும் ஆதரிப்பதில்லை. இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்பவரது நோக்கம், மதம் இனங்களுக்கிடையில் மோதல்களை உருவாக்கி உள்ளங்களை மாசுபடுத்தி விடுவதாகும். இந்த நோக்கத்தை அடையமுடியாதவாறு அனைத்து இனங்களும் ஒன்றினைந்து நாட்டைக் கட்டியெழுப்பவதன் மூலமே பயங்கரவாதிகளின் இலக்கைத் தோற்கடிக்க முடியும். இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கும், போதனைகளுக்கும் மாற்றமான முறையில் இஸ்லாமிய அடையாளங்களோடு ஐ.எஸ்ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பினரது செயற்பாடுகளை இந்த நாட்டு முஸ்லிம்கள் ஒரு போதும் அங்கீகரிக்கப்போவதில்லை - என்றனர்.

(கு)

# அத்திபாரம் மிக வலுவானது விரைவில் கட்டியெழுப்வோம்

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 6



கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் அரசியல் உரிமை சார்ந்த பிரச்சினையல்ல. மாறாக பயங்கரவாதத்தை அடிப்படையாகக் கொண்ட பிரச்சினை. இதனால் நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கமொன்று ஏற்பட்டுள்ளது. எமது பொருளாதாரக் கட்டமைப்பின் அத்திவாரம் மிகவும் வலுவானது என்பதால் இந்தச் சவாலை உறுதியுடன் எதிர்கொண்டு, பொருளாதாரத்தை விரைவில் சீரமைக்க முடியும்.

இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

குண்டுத்தாக்குதல்களால் பொருளாதாரத்தில் பல்வேறு எதிர்மறையான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. இந்தநிலையில் பொருளாதாரத்தின் தற்போதைய நிலை மற்றும் அதனைச் சீரமைப்பதற்கு அரசு முன்னெடுக்கவுள்ள திட்டங்கள் குறித்து வினவிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் இத்தகையதொரு மிகமோசமான பயங்கரவாதத் தாக்குதல் இடம்பெற்றதன் பின்னர் முதலீட்டாளர்கள் முதலீடு செய்யும் அளவு, சுற்றுலாப்பயணிகளின் வருகை என்பனவற்றில் சடுதியான வீழ்ச்சி ஏற்ப்டும். இது குறுகிய காலத்தில் தீர்க்கப்படக்கூடிய பிரச்சினையா அல்லது நீண்டகாலம் தேவைப்படுமா என்பது குறித்தும் சிந்திப் பார்கள்.

கடந்தஒக்ரோபர் மாதம் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியால் எமது பொருளாதாரம் எதிர்மறையான தாக்கங்களை எதிர்கொள்ள நேர்ந்தது. அவ்வாறிருந்தும் அரசியல் குழப்ப நிலைக்குத் தீர்வு காணப்பட்டு எட்டு வாரகாலத்துக்குள் இந்தப் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்கான செயற்பாடுகளை விரைந்து முன்னெடுத்தோம். துரதிஷ்டவசமாக தற்போது நாட்டில் ஏற்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களால் மீண்டும் எமது பொருளாதாரம் சவாலை எதிர்கொண்டுள்ளது. எனினும் அத்திவாரம் உறுதியானது என்பதால் இந்த சவாலை உறுதியுடன் எதிர்கொண்டு, பொருளாதாரத்தை விரைவில் சீரமைக்க முடியும் என்று நம்புகின்றோம் - என்றார். (கு-61)

# சாவகச்சேரி பிரதேச சபையின் 8 வீதிகளைச் சீரமைக்க நிதி

## சுமந்திரன் எம்.பி. ஒதுக்கினார்

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 8 வேலைத் திட்டங்களுக்கு நிதி வழங்கப்பட்டு வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிராம எழுச்சி வேலைத் திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரனின் நிதி ஒதுக்கீட்டில் இந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

மட்டுவில் வடக்கு பாடசாலை வீதிக்கு ரூ. 1.5 மில்லியன், மட்டுவில் கிழக்கு ஆலடி வீதிக்கு ரூ.ஒரு மில்லியன், மட்டுவில் கண்டல்காட்டு வீதிக்கு ரூ. 1.5 மில்லியன், கைதடி நுணாவில் எல்லை வீதிக்கு ரூ. 1.5 மில்லியன், கச்சாய் புங்கடிப் பிள்ளையார் கோவில் வீதிக்கு ரூ. ஒரு மில்லியன், மட்டுவில் மத்தி வேவில் வீதிக்கு ரூ. 1.5 மில்லியன், வரணி வேளையடி நந்தாவில் மந்துவில் கிழக்கு வரணி இணைப்பு வீதிக்கு ரூ. ஒரு மில்லியன், மட்டுவில் கிழக்கு பொற் கொல்லர் வீதி மிகுதி வேலைக்கு ரூ. 0.7 மில்லியனும் ஒதுக்கப்பட்டு வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (கு-159)

# அமைச்சர் ரிஷாட் ஓமான் சென்றார்

கொழும்பு, மே 6



கைத்தொழில் வணிக அமைச்சர் ரிஷாட் பதியுதீன் கடந்த வெள்ளிக்கிழமை வெளிநாடு சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் சிறிலங்கா எயார் லைன்ஸ் வானூர்தி சேவைக்குச் சொந்தமான யு.எல் 205 என்ற வானூர்தியூடாக அவர் ஓமான் சென்றுள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

நாட்டில் எடுக்கப்பட்ட தொடர்குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் அமைச்சரின் சகோதரர் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளமை மற்றும் வில்பத்து தொடர்பான பிரச்சினைகளுக்கு மத்தியில் இவரது திடீர் வெளிநாட்டு பயணம் அமைந்துள்ளதாக ஆங்கிலப் பத்திரிகையொன்று சுட்டிக்காட்டியுள்ளது. (கு-31)



## கொல்லப்பட்டவர்களுக்கு ஐ.நா.பிரதிநிதி அனுதாபம்

கொழும்பு, மே 6
இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிப் பொதுச் செயலர் மிகெல் மொரடினோஸ் அண்மையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து, உயிர்த்த ஞாயிறன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாக தனது அனுதாபத்தைத் தெரிவித்தார். இலங்கை அரசுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் அவர் உறுதியளித்துள்ளார் என்று தலைமை அமைச்சர் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இலங்கைக்கு வருகை தந்து தனிப்பட்டரீதியில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து, இலங்கை அரசுக்கு தனது அனுதாபத்தைத் தெரிவிக்குமாறும், இந்தச் சந்தர்ப்பத்தில் ஐக்கிய நாடுகள் சபைக் கட்டமைப்பு முழுவதும் இலங்கை அரசைப் பலப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது என்பதை அறியப்படுத்துமாறும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் தனக்கு அறிவித்துள்ளார் என்றும் பிரதிப் பொதுச் செயலர் தெரிவித்துள்ளார் என்று ஊடக அறிக்கையில் உள்ளது. (து)

# பாதுகாப்பு விவகாரங்களில் நெருங்கி செயலாற்றுவோம்

## அமெரிக்கத் தூதர் தெரிவிக்கிறார்

கொழும்பு, மே 6
இலங்கையில் இராணுவத்தளமொன்றை அமைக்கும் நோக்கம் எதுவும் அமெரிக்காவுக்குக் கிடையாது என்று தெரிவித்திருக்கும் அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிஸ்ட், எதிர்காலத்தில் பயங்கரவாத எதிர்ப்பு உட்படப் பாதுகாப்பு விவகாரங்களில் இலங்கையுடன் தனது நாடு நெருக்கமாகப் பணியாற்றும் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.



அமெரிக்கத் தூதரகம் கொழும்பில் ஏற்பாடு செய்த முகப்புத்தகக் கலந்துரையாடல் ஒன்றில் தனது கருத்துக்களை வெளிப்படுத்திய அவர், 'இலங்கையில் இராணுவத்தளம் ஒன்றை அமைப்பதில் அமெரிக்காவுக்கு அக்கறை இருப்பதாக வெளிவரும் பத்திரிகைச் செய்திகளை நான் வாசித்து வருகின்றேன். அந்தச்செய்திகள் முற்றிலும் தவறானவை என்பதை வெளிப்படையாகவும், நேரடியாகவும் கூறுகின்றேன். இலங்கையில் இராணுவத்தளத்தை அமைக்கும் திட்டம்எதனையும்அமெரிக்கா கொண்டிருக்கவில்லை' என்றார்.

ஈஸ்டர்ஞாயிறுகுண்டுத்தாக்குதல்களைத் தொடர்ந்து இலங்கையில் ஏற்பட்டிருக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல் நெருக்கடி குறித்து கருத்துக் கூறிய அமெரிக்கத் தூதுவர், 'அமெரிக்கா வெளியிட்ட தற்போதைய பயண அறிவுறுத்தல் பயங்கரவாத சதித்திட்டங்களின் அச்சுறுத்தல் தொடர்கிறது என்று நாங்கள் நம்புவதாகக் கூறியிருக்கின்றது. அமெரிக்க குடிமக்களைப் பாதுகாப்பது எமது கடப்பாடு. இந்தப் பயண அறிவுறுத்தலை வெளியிட்டு நாங்கள் அந்தக் கடமையைச் செய்திருக்கின்றோம். எமது உலகளாவிய பயண அறிவுறுத்தல் திட்டத்தின் ஒருபகுதியே அது. முன்னெச்சரிக்கை காரணமாக தற்போதைக்கு பாடசாலைக்குச் செல்லும் எமது சிறுவர்களை வீடுகளுக்கு அனுப்பியிருக்கின்றோம். சாத்தியமான அளவுக்கு மிகவும் பிந்திய தகவல்களை அமெரிக்க குடிமக்கள் பெற்றுக்கொண்டு தமது பயணங்கள் குறித்து சிறந்த தீர்மானம் எடுப்பதை உறுதி செய்வதற்காகவே நாம் பயண அறிவுறுத்தல் மட்டங்களைத் தொடர்ச்சியாக மீளாய்வு செய்கின்றோம். இலங்கைக்குப் பயணஞ்செய்வதை மீள்பரிசீலனை செய்யுமாறு அமெரிக்கர்களை தற்போதைய பயண அறிவுறுத்தல் அறிக்கை கேட்டுக்கொள்கின்றது' எ;னறும் அவர் குறிப்பிட்டார்.

குண்டுத்தாக்குதல்கள் குறித்து இலங்கை அரசு மேற்கொண்ட விசாரணைகளுக்கு ஆதரவளிக்க அமெரிக்கா கடுமையாகப் பாடுபடுகின்றது என்றும் அமெரிக்கத் தூதுவர் மேலும்தெரிவித்தார். (து-31)

## காயமடைந்தவர்களுக்கு ரூ.ஒரு கோடி 78 லட்சம்

### சீன் அரசு வழங்கியது

கொழும்பு, மே 6
ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு குறித்ததொகை நிதியுதவியை சீனா நேற்றுமுன்தினம் வழங்கியது.

இலங்கையிலுள்ள சீனத்தூதுவர் ஷெங் யுவான் சீன செஞ்சிலுவைச் சங்கத்தின் சார்பில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தேசிய செயலர் நிமல் குமாரிடம் ஒரு கோடி 78 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவுக்கான காசோலையைக் கையளித்தார்.

இந்த நிதியுதவி குண்டுத்தாக்குதல்களில் காயமடைந்தவர்களின் சிகிச்சைகளுக்காகப் பயன்படுத்தப்படும்.

துயரம் நிறைந்த இந்தத் தருணத்தில் இலங்கை மக்களுக்கு ஆதரவாக சீன அரசு உறுதியாக நிற்கிறது. தேசிய பாதுகாப்பு மற்றும் உறுதிப்பாட்டை பேணிக்காத்து சமாதானத்தையும், சுபீட்சத்தையும் ஏற்படுத்த இலங்கைக்குச் சீன அரசு முற்றுமுழுதான ஆதரவை வழங்குமென்று சீனத்தூதுவர் உறுதியளித்தார்.

இலங்கை விடுத்திருக்கும் அவசர வேண்டுகோளுக்கு இணங்க சீன அரசு அதன் ஆற்றலுக்குட்பட்ட தேவையான சகல உதவிகளையும் வழங்கும். அது குறித்து சீன அரசு இலங்கையுடன் அவசரப் பேச்சு நடத்திக் கொண்டிருக்கின்றது என்றும் சீனத்தூதரகம் அறிவித்திருக்கின்றது.

குண்டுவெடிப்புகளுக்குப் பிறகு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் ஆற்றிவருகின்ற பணிகள் குறித்து சீனத்தூதுவருக்கு விளக்கிக்கூறிய நிமல் குமார், இலங்கைக்கு நெருக்கடியான இந்தத்தருணத்தில் சீன அரசு வழங்கியுள்ள இந்த நிதியுதவியை பெரிதும் மெச்சினார். இந்த நிதி காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு முழுமையாகப் பயன்படுத்தப்படும் என்றும் உறுதியளித்தார். (து-61)

## கோவில் வாழைத் தோட்டத்தில் வீசப்பட்டிருந்த ஆயுதங்கள் மீட்பு

மட்டக்களப்பு, மே 6
ரி 56 ரக துப்பாக்கி ரவை கூடு, கோடரி, வாள் ஒன்று கோவில் வளாக வாளைத் தோட்டத்தில் வீசப்பட்ட நிலையில் நேற்று மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.



சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறி பத்திரகாளி அம்மன் ஆலய வளாக வாழைத் தோட்டம் ஒன்றில் வீசப்பட்டிருந்தநிலையிலேயே அவற்றை மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்துக்கிடமான உரப்பை ஒன்று காணப்படுவதை கோவில் பராமரிப்பாளர் அவதானித்துள்ளார். அது பற்றி ஆலய பரிபாலன சபைத் தலைவர் சம்மாந்துறைப் பொலிஸாருக்கு அறிவித்தார். சிறப்பு அதிரடிப்படையின் குண்டு செயலிழக்கும் பிரிவு சோதனை மேற்கொண்டபோதே அவற்றில் மேற்கூறிய ஆயுதங்கள் இனங்காணப்பட்டன. அவற்றை பொலிஸார் அகற்றினர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (து)

## வெற்றுக் காணியில் ஆயுதங்கள் மீட்பு

செங்கலடி, மே 6
மட்டக்களப்பு ஏறாவூர் வாவியோரம் உள்ள தனியார் வெற்றுக்காணியொன்றில் வீசப்பட்டிருந்த ஒரு தொகுதி வெடிபொருள்களை இராணுவத்தினர் கடந்த புதன்கிழமை மீட்டுள்ளனர்.

கைக்குண்டுகள்2, பெரிய கத்தி, ரீ56 ரக தன்னியக்க துப்பாக்கிக்குப் பயன்படுத்தும்மெகசின்கள்6 மற்றும் ரவைகள் 365 என்பன மீட்கப்ப்ட்டன. எவரும் கைதுசெய்யப்படவில்லை. மட்டக்களப்பு இராணுவ குண்டு செயலழப்புப் பிரிவினர் குண்டுகளை செயலிழக்கச் செய்தனர். துப்பாக்கி ரவைகள் உள்ளிட்ட பொருள்கள் ஏறாவூர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (து)



# பொன்சேகாவுக்கு அமைச்சுப் பதவி வழங்கின் பயங்கரவாதம் ஒழியுமா?

## எதிர்க்கட்சியினர் கேள்வியெழுப்புகின்றனர்

ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு சட்டம் ஒழுங்கு அமைச்சு வழங்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்துகின்றது. எனினும், கடந்த நான்கரை வருட காலமாக நாட்டின் பாதுகாப்புக் குறித்து எந்த அக்கறையுமற்று இருந்தவர்களுக்குத் தற்போது அமைச்சை வழங்குவதால் மாத்திரம் பயங்கரவாதத்தை ஒழித்து விட முடியுமா?

இவ்வாறு எதிர்க்கட்சித் தரப்பினர் கேள்வியெழுப்புகின்றனர்.

சரத் பொன்சேகாவுக்கு அந்த அமைச்சை வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்துகின்றது. இந்த நிலையில் எதிரணி மேற்கண்டவாறு கேள்வியெழுப்பியது.

இது குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்ததாவது:

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக அரசதலைவர் எடுக்கும் வேலைத்திட்டங்களுக்கு இடையூறு ஏற்படுத்தாமல் இருந்தாலே போதும்.

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவால் இஸ்லாம் அடிப்படைவாத பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க முடியும். அதற்கு ஆளும், எதிர்க் கட்சிகள் அனைவரும் ஒன்றிணைந்து முழுமையான ஆதரவை வழங்குவதே போதுமானதாக இருக்கும். மாறாக அரசதலைவர் செய்ய மறுக்கும் ஒரு விடயத்தை செய்யுமாறு கூறி தொடர்ந்தும் அவரை வலியுறுத்திக் கொண்டு முன்னெடுக்கும் வேலைத் திட்டங்களுக்கு தடையேற்படுத்த முயற்சிக்கக் கூடாது.

பிரச்சினைகளை ஏற்படுத்தி காலத்தை வீணடிக்காது அமைதியாக இருந்தாலே விரைவில் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட முடியும் - என்றார்.

இது குறித்து மகிந்த தரப்பினரின் நிலைப்பாடு தொடர்பாக அந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்ததாவது:

திட்டமிட்டுத் தொடர் குண்டு தாக்குதல்களை நடத்தும் இஸ்லாமிய அடிப்படைவாதிகளை, அமைச்சுக்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதால் ஒழித்து விட முடியாது. பொன்சேகாவுக்கு மாத்திரமல்ல மக்கள் பிரதிநிதிகள் என்ற ரீதியில் முழு நாடாளுமன்றுக்கும் இந்த விடயத்தில் பொறுப்புள்ளது. - என்றார். (து-61)

# மாணவர்களின் விடுதலையை விரைவுபடுத்த நடவடிக்கை

## யாழ். பல்கலைப் பேரவைக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 6

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்ட மாணவர்களின் விடுதலை தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுப்பது என்று யாழ்ப்பாணம் பல்கலைக் கழக பேரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் பேரவைக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் மாணவர்களின் கைது தொடர்பாக ஆராயப்பட்டது. அவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, அவர்களை விரைந்து விடுதலை செய்வதற்குச் சாத்தியமான வழிமுறைகள் ஊடாக முயற்சிப்பது என்று அந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

மாணவர்களின் விடுதலை தொடர்பாகச் சட்டமா அதிபருடனும், யாழ்ப்பாண மாவட்டக் கட்டளைத் தளபதியுடனும் சந்தித்துப் பேசுவது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணை வேந்தர், பதிவாளர் ஆகியோருக்கும், யாழ்ப்பாண மாவட்டக் கட்டளைத் தளபதிக்கும் இடையே நாளை சந்திப்பு ஒன்று நடைபெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-105)

## மக்களை அச்சப்படுத்தவே பல்கலை. மாணவர் கைது

### தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணி கண்டனம்

யாழ்ப்பாணம், மே 6

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவரைக் கைது செய்துள்ளமை மக்களைத் தொடர்ச்சியாக அச்ச நிலையில் வைத்திருக்க வேண்டும் என்பதற்காகவே. இந்தச் செயற்பாட்டை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று தெரிவித்துள்ளது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணி.

இதுதொடர்பாக விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது:

எமது மக்களின் இயல்பு வாழ்க்கையையும், மாணவர்களின் மனதில் இனம் சார்ந்த பற்று உருவாவதையும் தடுப்பதற்காகவே இந்தச் செயற்பாடு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம். கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுவிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றுள்ளது. (எ-6)



## 'வோக்கி' வைத்திருந்தார் என்று மகிழுந்து சாரதி ஒருவர் கைது

சாவகச்சேரி, மே 6

வயலர்ஸ் தொலைத்தொடர்பு சாதனம் (வோக்கி டோக்கி) கொண்டு சென்றார் என்ற குற்றச்சாட்டில் மகிழுந்து சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சாவகச்சேரி பொலிஸாரின் சரசாலை கனகன்புளியடிச் சந்தியில் உள்ள சோதனைச் சாவடியில் நேற்றுமுன்தினம் மாலை வாகனச் சோதனையில் ஈடுபட்டனர். சுன்னாகத்திலிருந்து வந்ததாகக் கூறப்படும் மகிழுந்தை மறித்துச் சோதனையிட்டனர். அதன்போதே ஆசனத்தின் பின்னால் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் வயலர்ஸ் கருவி கண்டறியப்பட்டது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அதில் 3 பேர் பயணித்தனர். அவர்கள் வெளிநாட்டவர்கள். அனைவரும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

ஆரம்ப கட்ட விசாரணையில் பளையில் உள்ள கோழிப் பண்ணையில் பலர் கடமையாற்றுகின்றனர் என்றும் அவர்களுக்குக் கட்டளையிடுவதற்காக வயலர்ஸ் கருவி பயன்படுத்தப்பட்டதென்றும் கூறப்பட்டதாகத் தெரியவருகிறது.' இதனையடுத்து மகிழுந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## வடக்கில் திட்டமிட்டு அரசு குழப்பம் ஏற்படுத்த முயற்சி

### அனந்தி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 6

வடக்கில் திட்டமிட்ட குழப்பங்களை ஏற்படுத்த அரசு முயல்கின்றது. அதன் ஒரு நடவடிக்கையாகவே பல்கலைக் கழக மாணவர்களின் கைது நடந்துள்ளது. இத்தகைய சூழ்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்வதைக் கைவிட்டு, அவசரகாலச் சட்டத்தை நீக்கி மாணவர்களை விடுவிக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி மக்களை அச்சத்துக்குள்ளாக்கும் செயற்பாடுகளை அரசு முன்னெடுத்துள்ளது. திட்டமிட்ட வகையில் அரசு முன்னெடுக்கின்ற இந்தச் செயற்பாடுகள் ஜனநாயக விரோதமானது.

அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி சோதனைகளை அதிகரிப்பது, தேடுதல்களை மேற்கொள்வது, கைது செய்வது எல்லாம் தீர்வை நோக்கிய தமிழ் மக்களின் அகிம்சைப் போராட்டத்தையும் நீதிக்கான போராட்டத்தையும் பாதிப்பதாகவே அமையும். ஆகவே இதனை அனைவரும் உணர்ந்து கொள்கின்ற அதே நேரத்தில் பொது மக்களைப் பல வழிகளிலும் பாதிக்கின்ற அவசர காலச் சட்டத்தை உடனடியாக அரசு நீக்கிக் கொள்ள வேண்டியதும் அவசியமானது.

நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன என்று வெளி உலகுக்குக் காட்டி அரசு தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முயல்கிறது. அங்கு பிரச்சினைகள் இருக்கிறதென்றால் இனப் பிரச்சினைக்கான தீர்வை வழங்காமலும், ஐ.நா. தீர்மானத்தில் இருந்து விலகியிருப்பதற்கும் தேர்தல்களை நடத்தாமல் இருப்பதற்குமென பல காரணங்களை அரசு தன்வசம் வைத்துள்ளது. அரசு திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையில் இரண்டு முகங்கள் கொண்டு செயற்பட்டு வருகின்றது - என்றார். (எ-ரி1)

## மலையகத்தின் பாதுகாப்பு பற்றி மைத்திரி – தொண்டா கலந்துரையாடல்

பொகவந்தலாவ, மே 6

மலையகத்தின் பாதுகாப்புக் குறித்து அரசதலைவரிடமும் பதில் பொலிஸ்மா அதிபரிடமும் கலந்துரையாடியுள்ளேன் என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

மலையகத்தின் பாதுகாப்பு தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் கொட்டகலை கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (த)

## தனன்களப்பு வீடொன்றில் இராணுவச் சீருடை மீட்பு அங்கிருந்தவர் கைது

சாவகச்சேரி, மே 6

சாவகச்சேரி தனன்களப்பு வீதியிலுள்ள வீடொன்றிலிருந்து படையினர் பயன்படுத்தும் சீருடையும் கையுறைகளும் நேற்றுப் படையினரால் மீட்கப்பட்டுள்ளன என்றும் அந்த வீட்டில் தங்கியிருந்த முஸ்லிம் நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். கோவிற்குடியிருப்பு தொடக்கம் தனன்களப்பு வீதி வரையான பகுதிகள் படையினர் மற்றும் பொலிஸாரால் நேற்றுக் காலை சுற்றிவளைக்கப்பட்டு வீடு வீடாகச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன்போதே இராணுவச் சீருடை கண்டுபிடிக்கப்பட்டது. கைது செய்யப்பட்டவர் தையல் நிலையம் நடத்துபவர். சிப்பாய் ஒருவரே சீருடை தைக்குமாறு கூறி துணியைத் தம்மிடம் தந்தார் என்று கைது செய்யப்பட்டவரின் குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர். (த-9)

## மாணவர்களது விடுதலைக்காக அனைவரும் குரல் கொடுங்கள்

### கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மே 6

கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களின் விடுதலைக்காக அனைவரும் குரல் கொடுக்க வேண்டும் என்று கிழக்குப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர்களின் கைது தொடர்பாக அவர்கள் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

அதில் உள்ளதாவது:

இலங்கையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களை அடுத்து பல்கலைக்கழகங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதாக கூறி கடந்த 3ஆம் திகதி அன்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தைச் சோதனை செய்வதற்கு இலங்கை இராணுவம் அனுமதி கோரியிருந்தது. இதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் அனுமதி அளித்திருந்ததுடன் மாணவர் ஒன்றியமும் தனது முழு ஒத்துழைப்பை வழங்கி இருந்தது.

அதைத் தொடர்ந்து பல்கலைக் 'கழக மாணவர் ஒன்றிய கட்டடத்தில் காணப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனது ஒளிப்படம் மற்றும் முள்ளிவாய்க்கால் அவலங்களைக் குறிக்கும் பதாகைகள் காணப்பட்டதனை காரணம் காட்டி பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர், செயலர் மற்றும் சிற்றுண்டிச்சாலை ஊழியர் கைது செய்யப்பட்டு 16 ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்கப்பட்டுள்ளனர் .

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் அப்பாவி மாணவர்கள் மற்றும் ஊழியரைக் கைது செய்தமை என்பது மன வேதனை அளிக்கின்றது . தற்போதைய அசாதாரண சூழ்நிலைகளுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பே காரணமாக உள்ளது. அந்தச் சூழ்நிலையை காரணம் காட்டி அப்பாவி மாணவர்களைப் பயங்கரவாதிகள் எனச் சித்திரித்து கைது செய்தமையை கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் சமூகம் வன்மையாகக் கண்டிக்கின்றது. அவர்களின் எதிர்கால நலன் கருதி அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பதனையும் இலங்கை அரசிடம் வேண்டுகின்றோம்.

செய்யாத தவறுக்காக கைது செய்யப்பட்ட அப்பாவி மாணவர்கள் மற்றும் ஊழியரின் விடுதலைக்கு பேதங்கள் கடந்து அனைவரும் ஒருமித்து குரல் கொடுக்க வேண்டும் என்பதனை வேண்டி நிற்கின்றோம்- என்றுள்ளது. (எ-7)

## அளவெட்டி கும்பளாவளை பிள்ளையாருக்கு புதன் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், மே 6

யாழ்ப்பாணம் அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் கோவில் பெருந்திருவிழா நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 16ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 17ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 18ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று கோவில் தர்மகர்த்தா சபையினர் தெரிவித்தனர். (கு-63)

# அபிவிருத்திகளும் அரசியல் நகர்வும் சமமாக நகராவிடில் மக்கள் ஏற்கார்

## சரவணபவன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொடிகாமம், மே 6

அரசியல் மற்றும் அபிவிருத்தி இரண்டும் சமாந்தரமாக செல்லாவிட்டால் மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அதே நேரம், காலமறிந்து இடமறிந்து எங்கள் தேசியத்தைக் காப்பாற்ற வேண்டும். இதுவரை பல விளைவுகளை எதிர்நோக்கினோம். விலைமதிப்பில்லா அர்ப்பணிப்புக்கள் எல்லாம் வழங்கி முடிந்துவிட்டன.



இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

வரணிப் பகுதி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வரணி மாசேரி பொது மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணிக்கும் வரணி இயற்றாலை கலைவாணி சனசமூக நிலையத்தில் பிற்பகல் 4 மணிக்கும் அந்தந்த சனசமூக நிலையங்களின் தலைவர்கள் தலைமையில் நடைபெற்றன.

இதில் உரையாற்றுகையிலேயே சரவணபவன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அபிவிருத்தி என்ற சொற்பதத்தை நாங்கள் கடந்த 2 வருடங்களாகத்தான் பயன்படுத்தத் தொடங்கியுள்ளோம். அது எங்கள் சேவையின் அழுத்தம் தான். அரசியல் உரிமைகள் மாத்திரம் தான் பேச வேண்டும். என்ற நிலைப்பாடு சிலரிடமிருந்தது.

இளைஞர்களின் ஓட்டத்தை பார்த்தேன். போர் எப்போது நடந்தது? ஏன் நடைபெற்றது? என்று கேட்கிறார்கள்.

மாணவர்கள் கல்வியில், விளையாட்டில் கூடுதல் நாட்டம் செலுத்துகிறார்கள். அப்படியானவர்களுக்கு நாமும் பெற்றோர்களும் விளக்கங்களைக் கொடுக்கத் தான் வேண்டும்.

வடக்கு மாகாணத்தைத் தவிர மற்றைய மாகாணங்களில் அபிவிருத்தி நடக்கின்றது.

அவர்கள் எவ்வாறு வளர்ந்திருக்கிறார்கள். என்று அவர்களுக்குத் தெரியும்.

5 வருடங்களுக்கு முன்னர் அபிவிருத்தியைக் கதைத்திருந்தால்நான் இன்று இங்கே வந்து கதைத்திருக்க முடியாது.

எங்களுக்காக அர்ப்பணித்துவிட்டு போயிருக்கின்ற எல்லாவற்றையும் கருத்தில் எடுத்து அடைய வேண்டிய மார்க்கங்களை அடைந்தேயாக வேண்டும்.

இந்த இடத்தில் நான் சொல்லக்கூடியது இளைஞர்களே! அபிவிருத்தி வேண்டும். அதனைக் கொண்டுவர முயற்சி எடுக்கின்றோம். ஆனால் நோக்கங்களுக்காக 30 வருடங்களாக எவ்வளவோ விடயங்களை அர்ப்பணித்து விட்டோம். அவற்றை இழந்து விடக் கூடாது.

உங்களுக்கு என்னென்ன அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதை முதலில் தயார்ப் படுத்துங்கள். அதற்கான திட்ட முன்மொழிவைத் தயாரியுங்கள். பல விடயங்களை சிறப்பு நிதிக்குள் சில இடங்களை தேர்ந்தெடுப்போம். பின்தங்கிய இடங்களைத் தேர்ந்தெடுப்போம்.

வீதி விளக்குகள் பொருத்த 2 லட்சம் ரூபாவும், ஏதாவது வீதி சீரமைக்க 30 லட்சம் ரூபாவும், விளையாட்டுக் கழகத்துக்கு 50 ஆயிரம் ரூபாவும் தருகிறேன் - என்றார்.

நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் இணைப்பாளர் செ.பிரதாப், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்களான சி.பிரபாகரன், சு.கேதீஸ்வரன் கைதடிப் பிரதேச சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் இ.கந்தசாமி, சமூகமட்ட பிரதி நிதிகள், கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் மற்றும் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (த-159)

# மாணவரைக் காப்பது அரசினது பொறுப்பு

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத் தலைவி தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 6

மாணவர்களைப் பாதுகாக்க வேண்டியது அரசினதும் முப்படையினரதும் பொறுப்பு என்று வடக்கு-கிழக்கு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் அமைப்பின் தலைவி க.கலாரஞ்சனி தெரிவித்தார். கிளிநொச்சியில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் கைது கவலையளிக்கிறது. காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளின் அம்மாக்கள் என்றவகையில் நாம் பெரிதும் வேதனைப்படுகின்றோம். இந்த மாணவர்கள் விரைவில் விடுவிக்கப்படல் வேண்டும், அதனை ஊடகங்கள் ஊடாக கோரிக்கையாக அரசதலைவரிடம் முன்வைக்கின்றோம் எனத் தெரிவித்த அவர் படங்கள் பதாகைகள் வைத்திருந்தார்கள் என்ற காரணத்தால் பல்கலைகழக மாணவர்கள் கைது செய்யபட்டமை கவலைக்குரியது.

எஞ்சிய இந்தப் பிள்ளைகள் பாதுகாக்கப்பட வேண்டும், தற்போது ஏற்பட்டுள்ள இந்த அச்சுறுத்தல் மிக்க சூழலிருந்து தமிழ் மக்கள் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். (ஜ-214)

# கடும் காற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருள்



வவுனியா, மே 6

வவுனியாவில் மினி சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

வவுனியா பரண்நட்டகல் கிராம அலுவலகர் பிரிவுக்குட்பட்ட பனிக்கர்புளியங்குளம் கிராமத்தில் அண்மையில் வீசிய மினி சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வவுனியா மாவட்டச் செயலர் எம்.ஐ.கனீபா தலைமையில் உதவிப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த மினிசூறாவளியால் 26 குடும்பங்களை சேர்ந்த 94 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டனர். 26 வீடுகள் சேதமடைந்தன.

பாதிக்கப்பட்ட 26 குடும்பங்களுக்கும் நேற்றுமுன்தினம் இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் 'கியுமெடிக்கா ரிலீப்' என்ற நிறுவனத்தின் அனுசரணையில் உதவிப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன. உலர் உணவுப் பொருள்களுடன் தறப்பாள், நுளம்புவலை, பாய் மற்றும் போர்வைகள் என்பன வழங்கிவைக்கப்பட்டன. (ஜ-110)



# மாணவர்கள் 10 பேருக்கு ஈருருளிகள் கையளிப்பு

முல்லைத்தீவு, மே 6

முல்லைத்தீவு குமுழமுனை மகா வித்தியாலய மாணவர்கள் 10 பேருக்கு ஈருருளியும், மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக ப் போராட்டத்தில் ஈடுபட்டு வருபவர்களுக்கு உலர் உணவுப்பொருள்களும் வழங்கி வைக்கப்பட்டன.

ஜேர்மனியைச் சேர்ந்த தமிழர் கலாசார வட்டம் கயில்புறோன் நிதி உதவியில் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் இந்த உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டம் கரைத்துறைப் பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட குமுழமுனை மகா வித்தியாலய கல்வி கற்கும் க.பொ.த சாதரண க.பொ.த உயர்தர மாணவர்கள் பலர் பல கிலோ மீற்றர் தூரங்களில் இருந்து கால்நடையாக பாடசாலை வந்து செல்கின்றனர்.

இதனையடுத்து ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான 10 ஈருருளிகள் வழங்கப்பட்டன. இதேவேளை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான தீர்வு கோரி கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக நடைபெற்று வரும் போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொருள்களும் வழங்கப்பட்டன. (ஜ-222)

# உயிர்நீத்த உறவுகளுக்கு இளவாலையில் அஞ்சலி

## குருதிக் கொடையும் நடைபெற்றது



யாழ்ப்பாணம், மே 6

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில், குண்டுவெடிப்பில் உயிர்நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இளவாலை பிரதேச மருத்துவமனையில் நேற்று முன்தினம் காலை 8.30 அளவில் நடைபெற்றது.

மதகுருமார், பொதுமக்கள், அரசியல் பிரமுகர்கள், மருத்துவர்கள், பொது அமைப்பின் பிரதி நிதிகள் எனப் பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலி உரைகளை அருட்தந்தை யேசுரட்ணம் அடிகளார், நல்லூர் பிரதேச சபைச் செயலர் சுதர்ஜன் மற்றும் செஞ்சிலுவைச் சங்க பிரதித் தலைவர் ரவீந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து குருதிக் கொடை நடைபெற்றது. (த-37)

# வவுனியா வளாகத்தின் கல்வி செயற்பாடு இன்று ஆரம்பம்

வவுனியா, மே 6

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் கல்விச் செயற்பாடுகள் நாளை ஆரம்பிக்கப்படும் என்று வளாகத்தின் முதல்வர் ரி.மங்களேஸ்வரன் தெரிவித்தார்.

நாட்டின் தென்பகுதியிலும், கிழக்கு மாகாணத்திலும் நடத்தப்பட்ட குண்டு வெடிப்பின் காரணமாக ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக வவுனியா வளாகத்தின் கல்வி செயற்பாடுகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டிருந்தன. எதிர்வரும் வாரம் வளாகத்தின் கல்விச் செயற்பாடுகளைஆரம்பிக்கத்தீர்மானித்துள்ளோம்.

அதற்கமைய வியாபாரக் கற்கைகள் பீடத்தின் கல்விச் செயற்பாடுகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப் படவுள்ளன. பிரயோக விஞ்ஞான பீடத்தின் கல்விச் செயற்பாடுகள் நாளை செவ்வாய்கிழமை ஆரம்பிக்கப்படும் என்று தெரிவித்தார். (த-110)

# அருணோதயாவில் வகுப்பறை திறப்பு

யாழ்ப்பாணம், மே 6

யாழ்ப்பாணம் அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

தேசிய கொள்கைகள் பொருளாதார மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் நிதியொதுக்கீட்டில் இது அமைக்கப்பட்டது. இதனை நாடாளுமன்ற உறுப்பினர் சோ.சேனாதிராசா, மீள்குடியேற்ற அமைச்சின் செயலர் சிவஞானசோதி, யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். (த)



கோத்தபாய வரவில்லை

# லலித், குகன் வழக்கு ஜூனுக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 6

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்ச சாட்சியமளிக்க யாழ்ப்பாண நீதிமன்றுக்கு வரவில்லை. அதனால், அவரது காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களான லலித் மற்றும் குகன் ஆகியோரின் ஆள்க்கொணர்வு மனு ஜூன் 21ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட் டது.

கோத்தாபய ராஜபக்ச சார்பில் முன்னிலையான சட்டத்தரணி அமரசிங்க, தமது கட்சிக்காரர் அடுத்த தவணையில் மன்றில் முற்படுவார் என்று யாழ் நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை மன்றுரைத்தார்.

2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் யாழ்ப்பாண நகரில் நடைபெறவிருந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டிருந்த லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் ஆவரங்காலில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டனர்.

இதுதொடர்பாக அவர்களின் உறவினர்களால் ஆள்க்கொணர்வு மனு 2012ஆம் ஆண்டு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாணையின் போது, இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாண நீதிவான் மன்றுக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி விசாரணைகள் ஆரம்பமாகின. ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்குமார, குகன் முருகானந்தனின் மனைவி, லலித்குமார் வீரராஜின் தந்தையார் ஆகியோர் ஆரம்பத்தில் சாட்சியமளித்திருந்தனர். தொடர்ந்து முன்னாள் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல உள்ளிட்ட சிலர் சாட்சியமளித்திருந்தனர். (து-37)

# பயங்கரவாத சவாலை ஒழிக்கும் ஆற்றல் மைத்திரிக்கு உள்ளதாம்

உலகளாவிய பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் அரசியல் தலைமைத்துவம் மிக முக்கியமானதென சுட்டிக்காட்டிய ஐக்கிய இராச்சியத்தின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார குற்றங்கள் தொடர்பான இராஜாங்க அமைச்சர், பயங்கரவாத சவால்களை இலங்கையிலிருந்து முற்றாக ஒழிப்பதற்கான ஆற்றல் நாட்டின் தற்போதைய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வுக்கு இருப்பதாகத் தெரிவித்தார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐக்கிய இராச்சியத்தின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார குற்றங்கள் தொடர்பான இராஜாங்க அமைச்சர் பென்வல்சே, அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை நேற்று முன்தினம் சந்தித்தார். இந்தச் சந்திப்புத் தொடர்பில் அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள ஊடகக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்தப் பயங்கரவாத சவால்களுக்கு மத்தியில் அரச தலைவர் மேற்கொண்ட நடவடிக்கைகளால் வெற்றிகரமாகப் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த முடிந்துள்ளமை தொடர்பில் இதன்போது அவர் அரச தலைவருக்குத் தனது பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பயங்கரவாத தாக்குதல் இஸ்லாமிய பன்னாட்டுப் பயங்கரவாதத்தின் ஒரு பகுதியாகுமென தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதோடு, இத்தகைய உலக பயங்கரவாத இயக்கங்களை எதிர்கொள்வதற்கு வெளிநாடுகளின் உதவி அவசியமாகுமெனவும் பிரிட்டன் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த துன்பியல் சம்பவத்துக்கு தமது அனுதாபங்களை தெரிவித்து இரண்டாவது எலிசபெத் மகாராணி, பிரிட்டன் தலைமை அமைச்சர் தெரேசா அம்மையார் உள்ளிட்டோர் அனுப்பி வைத்துள்ள இரங்கல் செய்திகள் மற்றும் இந்த இக்கட்டான சூழலில் பிரிட்டன் அரசு வழங்கிய உதவிகளுக்கும் நன்றி தெரிவித்த அரச தலைவர், விசாரணை நடவடிக்கைகளுக்கு உதவி வழங்குவதற்காக பிரிட்டன் புலனாய்வு பிரிவின் சிறப்புக் குழுவொன்றை விரைவில் நாட்டிற்கு அனுப்பி வைத்தமைக்கும் தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த பிரிட்டன் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், இஸ்லாமிய பயங்கரவாதிகள் ஒவ்வொரு தாக்குதல்களுக்கும் வெவ்வேறு உத்திகளை கையாளுவதனால் இவ்வாறானதொரு பெரிய இயக்கத்தை தோற்கடிப்பதற்கு அனைத்து நாடுகளினதும் புலனாய்வு சேவைகளையும் இரகசிய தகவல்களையும் பரிமாறிக்கொள்ளுதல் அடிப்படை தேவையாகுமெனக் குறிப்பிட்டார்.

தேவையான ஒத்துழைப்புகளை இலங்கை அரசுக்கு வழங்க பிரிட்டன் அரசு தயாராக உள்ளதாகவும் பிரிட்டன் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார் என்றுள்ளது. (ஒ.5)

# பாதுகாப்புத் தீர்மானங்களை ரணில் வெளியே கசியவிடுவார்

## அவரில் நம்பிக்கையில்லை என்பதாலேயே அழைப்பதில்லை என்கிறது சு.க.

கொழும்பு, மே 6

பாதுகாப்புச் சபையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் வெளியில் கசியும் என்ற சந்தேகம் காணப்படுவதாலேயே தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை அழைப்பதில்லை என்று தெரிவித்தார் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக சேறுபூசும் வகையில் விகாரைகளுக்கு அனுப்பப்படவிருந்த கடிதங்களின் பின்னணியில் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல உள்ளார். இந்த விடயம் தேசிய பாதுகாப்புக்கு எவ்விதத்திலும் அச்சுறுத்தல் இல்லை என்று அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாக அறிய முடிகின்றது.

உண்மையில் தனது அரசின் தலைவருக்கு எதிராக இவ்வாறு மோசமான முறையில் செயற்படுகின்றமை எந்தளவு தார்மீக தன்மையுடையது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

தவறான விடயங்களை உள்ளடக்கியதாக காணப்படும் இந்தக் கடிதங்களின் ஊடாக அவர்கள் எதிர்ப்பார்ப்பது என்ன ?

சபை முதல்வராக இருக்கும் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல நாடாளுமன்றத்தில் விளக்கமளிக்கும் போது, வெளிநாட்டு உளவுத் துறையின் எச்சரிக்கை ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி கிடைக்கப்பெற்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறெனில் ஏன் அதனை சம்மந்தப்பட்ட தரப்புகளுக்கு அறிவிக்கவில்லை என்ற கேள்வி எழுகின்றது.

அதேபோன்று தேசிய புலனாய்வு பிரிவு ஏன் அரச தலைவருக்கு அறிவிக்கவில்லை எனவும் அமைச்சர் கிரியெல்ல கேள்வி எழுப்புகின்றார். அரச விதிமுறைகள் தெரியாது பேசுகின்றார். அரச தலைவர் மைத்திரி மீது வீண்பழி சுமத்துவதாகக் கருதமுடிகின்றது.

நான்கு மாதங்களுக்கு முன்பதாகவே சட்ட ஒழுங்கு அமைச்சை அரச தலைவர் தனக்குக் கீழ் கொண்டு வந்தார்.

அதற்கு முன்னர் ஐக்கிய தேசிய கட்சியின் அமைச்சர்கள் வசமே அந்த அமைச்சு காணப்பட்டது. உயிர்த்த ஞாயிறு அழிவை தடுக்க முயற்சிக்காது வீண் பழி சுமத்துவதில் குறியாகவே இருக்கின்றனர். போதைப்பொருளுக்கு எதிராக அரச தலைவர் மேற்கொண்ட நடவடிக்கைகளால் பெரியளவில் கைதுகள் இடம்பெற்றன. இவற்றுடன் பயங்கரவாதமும் தொடர்புப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் காணப்படுகின்றது.

உலகில் போதைப்பொருள், ஆயுதம் மற்றும் பயங்கரவாதம் என்பன ஒன்றாகவே காணப்படுகின்றன. இவ்வாறு இருக்கும் போது இலங்கையிலும் அவ்வாறானதொரு தொடர்பு இருக்கக் கூடும் என்ற சந்தேகம் காணப்படுகின்றது.

ஏனெனில் போதைப்பொருள் மற்றும் ஆயுதங்கள் குறித்து அரச தலைவர் அண்மையில் கடுமையான நடவடிக்கைகளை எடுத்திருந்தார். அரசிலிருந்து கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் அரச தலைவருக்கு எதிராகக் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவைப் பாதுகாப்பு சபைக்கு ஏன் அழைப்பதில்லை என்றவாறும் அரச தலைவருக்கு எதிராக போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

பாதுகாப்புச் சபையில் எடுக்கப்பட்ட பல முக்கிய தீர்மானங்கள் வெளியில் கசிந்துள்ளன. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்துக்கு அமைய பொலிஸ் அதிகாரியை இடமாற்றம் செய்வதாக ஒரு தடவை பொலிஸ் மா அதிபர் தகவல் கசிய விட்டிருந்தார். பாதுகாப்புச் சபையில் பேசப்பட்ட விடயங்கள் மறுநாள் முக்கிய ஆங்கில பத்திரிகையில் காணப்பட்டது. எக்காரணம் கொண்டும் பாதுகாப்பு சபையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் வெளியில் கசிய முடியாது. இவ்வாறான காரணிகளின் அடிப்படையிலேயே அழைப்பதில்லை.

உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் அரச தலைவர் அனைத்து பாதுகாப்பு தரப்புகளையும் தினமும் அழைத்து தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார். அநாவசிய தலையீடுகளுக்கு வாய்ப்பில்லை - என்றார். (ஒ.5)

# புலிகளுக்கு எதிராக தமிழ்ச் சமூகம் குரல் கொடுத்திருக்க வேண்டுமாம்

யாழ்ப்பாணம், மே 6

இனத்தின் பெயரால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளுக்கு எதிராக தமிழ்ச் சமூகம் அன்றைக்கே குரல் கொடுத்திருந்தால், இத்தனை அழிவுகளைச் சந்திக்கவேண்டியிருந்திருக்காது என்று நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி கட்சியின் செயலர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கொழும்பு, மட்டக்களப்பு மாவட்டங்களில் தொடர் தற்கொலைத் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் யாழ்ப்பாணம், சிறீதர் தியேட்டரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் டக்ளஸ் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம் மதத்தின் பெயரால் அல்லது இஸ்லாம் சமூகத்தின் பெயரால் வன்முறைகள் முன்னெ டுக்கப்பட் டன. அந்த மதத்தை, சமூகத்தைச் சேர்ந்த, அரசியல் தலைவர்கள் உட்பட பலரும், விரும்பியோ விரும்பாமலோ எல்லோரும் அதை எதிர்த்துள்ளார்கள். வன்முறையைக் கட்டுப்படுத்த வேண்டும், அழிக்க வேண்டும் என்று குரல்கொடுக்கின்ற னர்.

இதுபோல் தமிழ் மக்களுடைய பிரச்சினையிலும், இலங்கை, இந்திய ஒப்பந்தத்துக்குப் பின்னர் இனத்தின் பெயரால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளுக்கு எதிராக தமிழ்ச் சமூகம் அன்றைக்கே முன்வந்து குரல் கொடுத்திருக்குமானால் நாங்கள் இடப்பெயர்வுகளை, அழிவுகளைச் சந்தித்திருக்கமாட்டோம் - என்றார்.

முன்னாள் போராளிகள் பற்றித் தெரிவித்த டக்ளஸ் தேவானந்தா, முன்னாள் போராளிகள், படைத்தரப்புக்களுடன், உளவுத் துறையுடன் இணைந்துவேலைசெய்யக்கூடாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுகிறது. முன்னாள் போராளிகள் தங்களுடைய சூழ்நிலைக்கு ஏற்ப அவர்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இனத்துக்கு எதிராகச் செயற்படுவார்கள் என்று நான் நினைக்கவில்லை - என்றார்.

தமிழ்க் கட்சிகள் இப்போது ஈ.பி.டி.பியையே பின்பற்றுகின்றனர். எமது கொள்கை ஒரே வகையாகத்தான் இருக்கிறது. கொள்கைகளை மாற்றிமாற்றிப் பேசும் அவர்கள் இப்போது ஈ.பி.டி.பி கட்சியின் கொள்கைகளையேபின்பற்றுகின்றனர்.

நாங்கள் 20, 30 வருடங்களாகக் கூறிக்கொண்டிருப்பதையே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் தற்போது கூறுகின்றார். மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்பதே அது என்றும் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவும் மணல் பிரச்சினை தொடர்பில் அரச தலைவருடன் பேசியுள்ளேன். விரைவில் நடவடிக்கை எடுப்பேன் என்று மேலும் தெரி வித்தார். (து-21,ரி1)

# ஹேமசிறி, பூஜித்துக்கு எதிரான வழக்கை விசாரிப்பதற்கு முடிவு

கொழும்பு, மே 6

முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்ன்ாண்டோ மற்றும் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மனுவை எதிர்வரும் 21ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் தீர்மானித்தது.

சட்டத்தரணி நாலக தாக்கல் செய்த மனு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகிய பிரதிவாதிகள் சார்பில் மன்றில் முன்னிலையாவது தொடர்பில் இதுவரை தீர்மானிக்கவில்லை என்று சட்டமா அதிபர் நீதிமன்றில் கூறினார்.

இதனையடுத்து மனுவை எதிர்வரும் 21ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்த போதும் தீவிரவாதத் தாக்குதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்காததால் முன்னாள் பாதுகாப்புச் செயலர் மற்றும் பொலிஸ் மா அதிபர் மக்களின் அடிப்படை உரிமையை மீறியுள்ளதாகத் தெரிவித்து அவர்களுக்கு எதிராக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்த க்கது. (ஒ.5)

# முன்எச்சரிக்கையால் குறைந்தன சாவுகள்

## பாராட்டுகிறது ஐ.நா.



ஒடிசா,மே 6
இந்தியாவின் ஒடிசா மாநிலத்தைத் தாக்கிய பெனி புயல் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் தாழ்வான பகுதிகளில் வசித்த சுமார் 15 லட்சம் மக்கள் தற்காலிக நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். பின்னர்கனமழையுடன்தாக்கியஇந்தப் புயலால் நூற்றுக்கணக்கான கிராமங்கள் வெள்ளக்காடாகின.
கடலோர மாவட்டங்களில் வெள்ளப் பெருக்கில் பல கால்நடைகள் அடித்துச் செல்லப்பட்டன. நூற்றுக்கணக்கான வீடுகள் நீரில் மூழ்கின ஏராளமான ஏக்கர் விளைநிலங்களில் இருந்த பயிர்கள் நிரில் மூழ்கி சேதமடைந்தன.
இவ்வாறு பொருளாதார ரீதியாகப் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளபோதிலும்,சாவுகள்குறைக்கப்பட்டுள்ளன. முன்கூட்டியே பெருமளவு மக்கள் பாதிப்படையக் கூடிய பகுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்டதும், முன் எச்சரிக்கையுடன் செயற்பட்டதுமே காரணம் என்று சிலாகிக்கப்படுகிறது. 20க்கு உட்பட்ட சாவுகளே சம்பவித்தன. இதனால் ஐக்கிய நாடுகள் சபையின் பேரிடர் குறைப்பு முகமை இந்திய அரசுக்குத் தனது பாராட்டுக்களைத் தெரிவித்தது.

# புயல்பாதித்தஒடிசாவுக்கு10கோடி

## தமிழக முதல்வர் அறிவிப்பு



சென்னை,மே 6
பெனி புயலால் பாதிக்கப்பட்ட ஒடிசா மாநிலத்துக்கு 10 கோடி(இந்திய மதிப்பில்) நிவாரண நிதி வழங்கப்படும் என்று தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி அறிவித்தார். ஒடிசா மாநிலத்துக்குத்தமிழகம்சார்பில்இந்த நிவாரண நிதி வழங்கப்படும் என்று தெரிவித்த முதல்வர்எடப்பாடிபழனிசாமிபெனிபுயலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குத் தமிழகஅரசின்சார்பில்இரங்கலையும்தெரிவித்தார்.
புயலால்பாதிக்கப்பட்டஒடிசாமாநிலத்துக்குத் தேவையானஉதவிகளைவழங்குவதற்குத் தமிழக அரசு தயாராக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.




# ‘பெனி’ தாக்கிய ஒடிசாவில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள்

புதுடெல்லி,மே 6
இந்தியாவின் ஒடிசா, மேற்கு வங்க மாநிலங்களைக் கடந்த வெள்ளிக்கிழமை பெனி புயல் தாக்கியது. புயல் கடந்து சென்றதும் அது தாக்கிய பகுதிகளில் பலத்த மழை பெய்தது. அந்தப் பகுதிகளில் மின்சாரம் நிறுத்தி வைக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான மின்கம்பங்கள் சேதமடைந்தன. மணிக்கு 175 முதல் 200 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் வீசிய இந்தப் புயலால் ஏராளமான வீடுகள் சேதமடைந்தன. 15 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டுப் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டனர். முழுவீச்சில் நிவாரணப் பணிகள் நடந்து வருகின்றன. அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, உடைகள் வழங்கப்படுகின்றன. 14 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் முழு வீச்சில் நிவாரணப் பணிகள் நடந்து வருகின்றன.

## இந்தியா - மியான்மர் இடையே நில நடுக்கம்

புதுடெல்லி,மே 6
மியான்மர் மற்றும் இந்தியா இடையிலான எல்லைப்பகுதியில் நேற்று மாலை 4.33 மணியளவில்நிலநடுக்கம்ஏற்பட்டது. இந்தியாவின் நாகலாந்து மாநிலத்தை ஒட்டியுள்ள மியான்மர் இந்திய எல்லைப்பகுதியில் ரிக்டர் அளவுக்கோலில்5.1அலகுகளாகப்பதிவான இந்த நிலநடுக்கத்தால்ஏற்பட்டபாதிப்புகள் தொடர்பான உடனடித் தகவல் ஏதும் வெளியாகவில்லை.



## ‘பெனி’யின் தாண்டவத்தால் பங்களாதேஷில் 14 பேர் சாவு

டாக்கா,மே 6
இந்தியாவின் ஒடிசா, மேற்கு வங்காளம் மாநிலங்களைத் தாக்கிய ‘பெனி’ புயலின் தாக்கத்துக்கு பங்களாதேஷில் 14 பேர் சாவடைந்தனர். இந்தியாவின் ஆந்திரா, ஒடிசா மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களைத் தாக்கிய இந்தப் புயல் முடிவில் பங்களாதேஷைத் தாக்கியது. இதனால் அங்கு 14 பேர் சாவடைந்தனர். 63 பேர் காயமடைந்தனர்.





# இன்றைய நாள்

**மேடம்:** புதியவர் ஒருவர் அன்பு பாராட்டுவார். தொழில், வியாபாரம் செழிக்கும். பணப்பரிவர்த்தனையில் முன்னேற்றம் உண்டு. இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேற்றுவீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**இடபம்:** சிலரது பேச்சு சங்கடத்தை ஏற்படுத்தலாம். தொழில், வியாபார நடைமுறை சீராக கூடுதல் நேரம் பணிபுரிவது அவசியம். பணவரவு சராசரி அளவில் கிடைக்கும்.

**மிதுனம்:** மனதில் அன்பு அதிகரிக்கும். உயர்வு, தாழ்வு கருதாமல் பழகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி எளிதாக நிறைவேறும்.

**கடகம்:** மனதில்கருணை அதிகரிக்கும். நற்செயலால் சமூகத்தில் வரவேற்பு பெறுவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சிக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை பலன் அளிக்கும். உபரி பண வருமானம் கிடைக்கும்.

**சிம்மம்:** எதிர்வரும் சிரமங்களை தாமதமின்றி சரி செய்ய வேண்டும். நண்பரின் ஆலோசனை நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும்.

**கன்னி:** பேச்சில் நிதானம் பின்பற்றுவதால் நன்மை ஏற்படும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கிடைத்த வாய்ப்பை தவறாமல் பயன்படுத்துவது நல்லது. பணவரவு சராசரி அளவில் இருக்கும்.

**துலாம்:** கடந்த நாட்களில் அலைச்சல் தந்த வேலை ஆதாயம் தருவதாக மாறும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். உபரி பணவருமானம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** நடைமுறை வாழ்வில் இருந்த குறுக்கீடு விலகும். தொழில், வியாபார வளர்ச்சியில் சிறப்பான இடத்தை பிடிக்க கடுமையாக பணி புரிவீர்கள்.

**தனுசு:** நண்பரை தவறாக கருதும் சூழல் ஏற்படலாம். தொழில், வியாபார நடைமுறை சுமாரான அளவில் இருக்கும். பணச்செலவில் சிக்கனம் பின்பற்றுவது நல்லது.

**மகரம்:** முக்கிய பணி நிறைவேற தாமதமாகலாம் .தொழில், வியாபார நடைமுறை சராசரி அளவில் இருக்கும். அடுத்தவர் பார்வையில் படும்படி தாராளமாக செலவழிக்க வேண்டாம்.


**கும்பம்:** வெற்றி பெற எளிதான வழி பிறக்கும். நண்பர் தேவையான உதவியை வழங்குவார். தொழில், வியாபாரத் தொடர்பு பலம் பெறும்.

**மீனம்:** சிலரின் அறிவுரை மனதில் சங்கடத்தை உருவாக்கும். கூடுதல் வேலை பளு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாப்பது நல்லது.

# ஏவுகணைகளை ஏவியது வடகொரியா அதிர்ச்சியில் உறைந்தது அமெரிக்கா

பியோங்ஜாங்,மே 6

நேற்றுமுன்தினம் காலை வடகொரியாவின் கிழக்குக் கடலோர நகரமான வோன்சான் அருகே அமைந்துள்ள ஹோடோ தீபகற்பப் பகுதியில்இருந்து குறைந்ததூர இலக்கைச் சென்று தாக்குதல் நடத்துவதற்காகத் தயாரிக்கப்பட்ட பல்குழல் ஏவுகணைகளை வடகொரியா பரிசோதித்தது.



இந்தத் தகவலை தென்கொரியாவின் இராணுவப் பணியாளர்களின் கூட்டுத்தலைமை தெரிவித்தது. வட கொரியா ஏவிய இந்த ஏவுகணைகள் அனைத்தும் கிழக்குத் திசையில் விரைந்து ஜப்பான் கடலில் 70 முதல் 200 கிலோ மீற்றர் தொலைவுவரை சென்று வீழ்ந்ததாக அந்தத் தகவல் கூறுகிறது. இது அமெரிக்காவை அதிர வைத்துள்ளது. வடகொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனைகளை நடத்தி இருப்பது தங்களுக்குத் தெரியும் என்று அமெரிக்கா அதிபர் மாளிகை அறிவித்தது.

இதையொட்டிக் கருத்துத் தெரிவித்த அதிபர் மாளிகையின் செய்தித் தொடர்பாளர் சாரா சாண்டர்ஸ், வடகொரியாவின் ஏவுகணைச் சோதனையைத் தொடர்ந்து உற்று நோக்கிக் கவனித்து வருகிறோம் எனக் குறிப்பிட்டார்.

வடகெரியாவின் போரிடும் வல்லமையைப் பிற நாடுகளுக்குக் காட்டுவதுடன், அணு ஆயுதம் தொடர்பான கலந்துரையாடல்களை விரைவுபடுத்துவதும், அமெரிக்காவுக்கு அழுத்தம் கொடுப்பதுமே கிம்மின் நோக்கம் என வடகொரியாவின் அரச செய்தி நிறுவனம் கூறியது.



இந்தப் பரிசோதனை பற்றிக் கிம் தனது பாதுகாப்புப் படையினருக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது, "நாங்கள் சக்தி மிக்கவர்களாக இருந்தால்தான் நாட்டில் சமாதானத்தையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்த முடியும்" என்றுள்ளார். இது தொடர்பாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தனது கீச்சகத்தில், "சுமூகமான உறவுகளைப்பேணும் வழிகளைக் கிம் கெடுத்துக்கொள்ள மாட்டார், அவருக்குத் தெரியும் நான் அவருடன் இணைந்து செயற்டுகிறேன். எனக்குக் கொடுத்த வாக்குறுதிகளை அவர் மீறமாட்டார் என நான் நம்புகிறேன், அவர் வடகொரியாவின் பொருளாதாரத்தைச் சீர் குலைக்கமாட்டார்" என்று இது குறித்துப் பதிவிட்டார்.


## காசாவில் பரஸ்பரம் தாக்குதல்கள்

ஜெருசலேம்,மே 6

பாலஸ்தீனத்துக்கு அருகாமையில் உள்ள காசா எல்லைப்பகுதியில் இருந்து தமது பகுதிக்குள் நேற்று 200க்கு மேற்பட்ட ரொக்கெட்டுகளை வீசிச் சரமாரியான தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்தது. பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேலுக்கிடையில் இருக்கின்ற காசா முனையில் இருந்து இஸ்ரேல் மீது அங்குள்ள ஹமாஸ் போராளிகள் அவ்வப்போது ரொக்கெட் மற்றும் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதற்குப் பதிலடியாகக் காசா மீது இஸ்ரேலின் போர் வானூர்திகளும் குண்டுமழை பொழிவதுண்டு.

காஸா பகுதியில் உள்ள ஆயுதக் குழு 200க்கும் மேற்பட்ட ஏவுணைகளைக் கொண்டு தாக்கியதால், நாங்கள் ஏவுகணைகள் மற்றும் டாங்கிகள் கொண்டு பாலஸ்தீனத்தைத் தாக்கினோம் என்று இஸ்ரேல் இராணுவத்தினர் தெரிவித்தனர்.

மூன்று இஸ்ரேலியர்க்ள் இந்த ரொக்கெட் தாக்குதலில் காயமடைந்ததாகவும், இஸ்ரேலிய இராணுவம் தாக்கியதில் ஒரு தாயும் அவரது குழந்தையும் உட்பட நான்கு பாலஸ்தீனியர்கள் சாவடைந்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகின.





## தாய்லாந்தின் புதிய மன்னர்!

தாய்லாந்து அரசராக மகா வஜிரலங்கோன் மணிமுடி சூடினார். நீண்டகாலம் ஆட்சி செய்த அவரது தந்தை பூமிபோன் அடுன்யடேட் 2016ஆம் ஆண்டு இறந்த பின்னர், 66 வயதாகும் அரசர் மகா வஜிரலங்கோன் அரசமைப்புச் சட்ட முடியாட்சியின் மன்னரானார். சில நாளகளுக்கு முன்னால், தனது மெய்க் காப்பாளர் பிரிவின் துணைத் தலைவர் ஜெனரல் சுதிடாவை அவர் திருமணம் செய்து அரச குடும்பத்தில் இணைத்திருந்தார். இதனால் தாய்லாந்தின் புதிய அரசியாக சுதிடா விளங்குவார் என்று முடிசூட்டு விழாவில் அவர் அறிவித்தார். தாய்லாந்து அரசமைப்புசட்ட முடியாட்சியை கொண்டிருந்தாலும், அரச குடும்பத்துக்குத் தாய்லாந்து மக்கள் அதிக மதிப்பு அளிக்கின்றனர். அரச குடும்பத்துக்குக்கணிசமான அதிகாரம் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



## 126 மணித்தியாலங்கள் தொடர் நடனம் நேபாளத்தைச் சேர்ந்த பெண் சாதனை

காத்மண்டு,மே 6

நேபாளத்தைச் சேர்ந்த பன்டனா நேபாள்(வயது-18) என்ற பெண் தொடர்ந்து தனியாக 126 மணித்தியாலங்கள் நடனமாடிச் சாதனை நிகழ்த்தினார். தனிநபராக அதிக நேரம் இடைவிடாமல் நடனம் ஆடிய பெண் என்ற உலக சாதனையை இந்தியாவைச் சேர்ந்த கலாமண்டலம் ஹேமலதா என்பவர் 2011ஆம் ஆண்டில் 123 மணித்தியாலங்களும் 15 நிமிடங்களும் தனியாக நடனம் ஆடி நிகழ்த்தியிருந்தார் அந்தச் சாதனையை முறியடித்தே இவர் முதலிடத்தைப் பிடித்தார். இதற்கான அங்கீகார பத்திரத்தை உலகசாதனைப்பதிவு அமைப்பின் கின்னஸ் பிரதிநிதிகள் நேற்று அவரிடம் ஒப்படைத்தனர். உலக சாதனை படைத்த பன்டனா நேபாள் தனது இல்லத்துக்கு அழைத்து நேபாளத்தின் தலைமை அமைச்சர் ஷர்மா ஒலி அவருக்குப் பரிசுகளை வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார்.




## அமெரிக்காவுக்கு அடி கொடுக்கத் தயாராக இருங்கள்

### வெனிசுலா அதிபர் அறிவிப்பு

காரகாஸ்,மே 6

நமது நாட்டின் மீது படையெடுக்கத் துடிக்கும் அமெரிக்காவின் மூர்க்கத் தனத்துக்குப்பதிலடிகொடுப்பதற்குத் தயாராக இருங்கள் எனத் தனது இராணுவத்துக்குவெனிசுலாஅதிபர் நிக்கோலஸ் மதுரோ அறிவிப்பு விடுத்தார். வெனிசுலாவில் அதிகரித்து வரும் போராட்டம் மற்றும் வன்முறைச் சம்பவங்களுக்கு முடிவுகட்டும் வகையில் அங்கு சுமுகமான ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். இல்லாவிட்டால்இராணுவநடவடிக்கைகளை எடுக்க அமெரிக்கா தயாராக உள்ளது என அமெரிக்க அயலுறவுத்துறை அமைச்சர் மைக் பாம்பியோ தெரிவித்தார். இந்த நிலையிலேயே மதுரோ இவ்வாறு தெரிவித்தார். :அமெரிக்கா நமது தாய்மண்ணைத்தொடுவதற்குத்துணிந்தால் நமது தாய்நாட்டைக் காப்பாற்றும் வகையில்கைகளில்ஆயுதங்களை ஏந்தி நீங்கள் தயார்நிலையில் இருக்க வேண்டும், என்றும் அவர் வலியுறுத்தினார்.



**பின்னணி**

வெனிசுலாவில்நீடித்து வந்த பொருளாதார நெருக்கடியால் அந்த நாட்டு மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டனர். அரசுக்குஎதிரானபோராட்டங்களில் ஈடுபட்டனர். இந்த நிலையில் நிக்கோலஸ் மதுரோ மறுபடியும் அந்த நாட்டு அதிபரானார். மதுரோவை ஏற்காத அந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர்அமெரிக்காமற்றும்வேறு சிலநாடுகளின் ஆதரவுடன்மதுரோவுக்கு எதிராகச் செயற்படுகிறார். மக்களில் சிலர் அவருக்கு ஆதரவளிக்கின்றனர். அங்குள்ள பொருளாதார நெருக்கடி அங்கு அரசுக்கு எதிரான பல போராட்டங்களைத் தோற்றுவித்திருக்கிறது.

# சோதனையில் வாள்கள் மீட்பாம்

யாழ்ப்பாணம், மே 6

கொக்குவில் பகுதியிலுள்ள பிரபல பாடசாலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட பாதுகாப்பை உறுதி செய்யும் சோதனை நடவடிக்கையின் போது வாள் ஒன்று மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். கொக்குவில் வராகி அம்மன் ஆலயப்பகுதியிலும் வாள் ஒன்று வீசப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலைகளை இன்று ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ள நிலையில் அவற்றின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பொலிஸாரால் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

கொக்குவிலுள்ள பிரபல பாடசாலையில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையில் கல்லூரியின் மண்டபம் ஒன்றில் மேல் மாடியில் இருந்து வாள் ஒன்று மீட்கப்பட்டது, என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.5,37)

அதள பாதாளத்துக்கு சென்றது சுற்றுலாத்துறை

# ஒரு பயணியுடன் வந்தது சுவிஸ் எயர் வானூர்தி

கொழும்பு, மே 6

கட்டுநாயக்க வானூர்தி நிலையத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை வந்தடைந்த சுவிஸ் எயர் வானூர்தியில் ஒரே ஒரு பயணி மாத்திரமே வந்திறங்கியுள்ளார். சுற்றுலாத்துறை அதிகாரிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

ஈஸ்ரர் ஞாயிறன்று நிகழ்ந்த குண்டுவெடிப்புகளை அடுத்து, இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளது.

கோடை விடுமுறையை இலங்கையில் கழிப்பதற்காக முன்பதிவு செய்யப்பட்டிருந்த ஆசனங்களை பெரும்பாலானோர் நீக்கி வருகின்றனர். வானூர்தி நிறுவனங்கள் தடுமாறத் தொடங்கியுள்ளன. கடந்த இரண்டு வாரங்களில், மிகக் குறைந்தளவு சுற்றுலாப் பயணிகளே கொழும்பு வந்துள்ளனர்.

அதிகளவு சுற்றுலாப் பயணிகளை ஏற்றி வரும், ஐரோப்பிய நாடுகளின் நகரங்களில் இருந்து வரும், வானூர்திகளின் இருக்கைகள், வெறுமையாகவே இருக்கின்றன. இதனால், பல்வேறு வானூர்தி நிறுவனங்கள் இலங்கைக்கான பயணங்களை மட்டுப்படுத்துவது குறித்தும் யோசித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ.5)

# 3 இளைஞர்கள் கைது

## வாள்கள் வைத்திருந்தனர் என்கின்றனர் பொலிஸார்

கொழும்பு, மே 6

யாழ்ப்பாணம் மற்றும் மானிப்பாய் பகுதிகளில் வாள்வெட்டு வன்முறையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் இரண்டு வாள்களுடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை யாழ்ப்பாணப் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான சிறப்புக் குற்றத்தடுப்புப் பிரிவினரே கைது செய்தனர்.

மானிப்பாயில் ஏப்ரல் 10ஆம் திகதி மூன்று வீடுகளுக்குள் புகுந்த வாள்வெட்டுக் கும்பல் அங்கு வசிப்பவர்களை அச்சுறுத்தும் வகையில் அட்டூழியத்தில் ஈடுபட்டுத் தப்பித்தது. அந்தக் கும்பலைச் சேர்ந்த ஒருவரை கோப்பாய் பகுதியில் வைத்து நேற்றுக் கைது செய்ததாகவும், அவரிடமிருந்து வாள் ஒன்று கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைதான சந்தேகநபர் வாளுடன் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை நாச்சிமார் கோவிலடியில் கடந்த ஆண்டு இடம்பெற்ற வாள்வெட்டில் இளைஞர் ஒருவரின் கைவிரல் துண்டானதுடன் மற்றொரு இளைஞரும் காயமடைந்தார். அந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவரைச் சந்தேகத்தில் சுன்னாகத்தில் வைத்துக் கைது செய்ததாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அவர்களிடமிருந்து வாள் ஒன்று கைப்பற்றப்பட்டதாகவும், சந்தேகநபர்கள் இருவரும் வாளுடன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர், என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.5,37)

### சமூக...

ஊடகங்கள் இலங்கையினுள் இயங்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. சமூக ஊடகங்கள் நிறுத்தப்பட்டமை தொடர்பில் அரசிடமிருந்து உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகவில்லை.

கடந்த ஈஸ்ரர் தாக்குதலையடுத்து இலங்கையினுள் சமூகஊடகங்கள் நிறுத்தப்பட்டன. ஒரு வாரத்தின் பின்னர் அவை இயங்க அனுமதிக்கப்பட்டன. இந்த நிலையில் நீர்கொழும்பில் நேற்று இரவு இடம்பெற்ற வன்முறைகளைத் தொடர்ந்து சமூகஊடகங்கள் இலங்கையில் இயங்கவில்லை. (ஒ.5)

### பழிவாங்க...

வகையில் நீர்கொழும்பில் வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. பழிவாங்கும் படலம் வேண்டவே வேண்டாம். மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ்வதையே நாம் விரும்புகின்றோம். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச நேற்றிரவு தெரிவித்தார்.

இந்த வன்முறையில் யார் ஈடுபட்டிருந்தாலும் அவர்கள் அனைவரையும் அரசு கைது செய்ய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (ஒ.5,22)

### ஸஹ்ரானின்...

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்முனை, ஒல்லிக்குளம் பகுதியிலேயே இந்த முகாம் இயங்கி வந்துள்ளது. இந்த அமைப்பைச் சேர்ந்தவர் என்று சந்தேகிக்கப்படும் அப்துல் ரவூப் என்பவரை கைது செய்து அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்த முகாம் தொடர்பில் தெரியவந்ததாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாய்ந்தமருதில் தற்கொலை தாக்குதலில் உயிரிழந்த தற்கொலைதாரியான ரில்வான் 2017ஆம் ஆண்டு பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது குண்டுவெடித்து கைவிரல்களையும், கண் ஒன்றையும் இழந்ததாக ஆரம்ப கட்ட விசாரணையின் போது கண்டறியப்பட்டுள்ளதாக பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர். இங்கிருந்தே தற்கொலை தாக்குதலுக்கான பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனவும், குண்டுகள் இங்கிருந்தே அனுப்பி வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் பாதுகாப்பு தரப்பினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். முகாமில் இருந்து குண்டுகளை அடைத்துக் கொண்டு செல்ல பயன்படுத்துவதற்காக வைக்கப்பட்டிருந்த பிளாஸ்டிக் குழாய்களும் தயார் செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

இது போன்ற குழாய்களே கடந்த 21ஆம் திகதி கட்டுநாயக்க வானூர்தி நிலையத்துக்கு அருகில் குண்டுகளுடன் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் இங்கிருந்துதான் அங்கு கொண்டுசெல்லப்பட்டதா என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படு வதாகவும் பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்துள்ளனர். முகாமுக்கு நூறு மீற்றர் தூரத்துக்குள் யாரும் நுழையும் போது அதனை கண்டுகொள்வதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், முகாமில் இருந்து இரகசியமான முறையில் வெளியேறும் வழியும் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இது தொடர்பான விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், புலனாய்வுத்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ.5)

### நீர்கொழும்பில்...

'வன்முறை காரணமாக வாகனங்கள், கடைகள் அடித்து உடைக்கப்பட்டு எரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சேதமாக்கப்பட்ட வாகனங்களும், கடைகளும் முஸ்லிம்களுக்குச் சொந்தமானவை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன் தமது வீடுகள் மீது கல்வீச்சுத் தாக்குதலும் நடத்தப்பட்டதாகவும், ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட பின்னரும் இந்தத் தாக்குதல் தொடர்ந்ததாகவும் அவர்கள் அச்சத்துடன் தெரிவித்தனர். முப்படையினர் வீதிகளில் நிற்கத்தக்கதாகவே இந்தத் தாக்குதல்கள் தம்மீது நடத்தப்பட்டதாகவும், தமது உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இருப்பதாகவும் அவர்கள் கண்ணீருடன் குறிப்பிட்டனர்.

நீர்கொழும்பு பலகத்துறைப் பகுதியில் நேற்று மாலை முச்சக்கர வண்டிச் சாரதிகள் இருவருக்கு இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. வாய்த்தர்க்கம் முற்றி மோதலாக மாறியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மோதலில் ஈடுபட்ட ஒரு குழுவினர், முப்படையினர் பார்த்துக் கொண்டு நிற்கவே, மற்றைய தரப்பினர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். முச்சக்கரவண்டியை புரட்டிப்போட்டு தீயிட்டுக் கொழுத்தினர். வேறு வாகனங்களையும் அடித்து நொருக்கி தீ வைத்தனர். அதேபோன்று வர்த்தக நிலையங்களும் தீயிட்டுக் கொழுத்தப்பட்டன. சுமார் 30பேர் கும்பல் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தீயிட்டப்பட்ட உடமைகள் முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமானவை என்று கூறப்படுகின்றது. தாக்குதல் நடத்திய கும்பலைச் சேர்ந்தவர்கள் அங்கு வசிக்கும் சிங்கள மக்கள் என்று, தாக்குதலுக்கு உள்ளான முஸ்லிம் மக்கள் குற்றம் சுமத்தினர்.

முஸ்லிம்களைத்தான் வீடுகளுக்கு செல்லுமாறு பாதுகாப்புப் படையினர் அறிவுறுத்துகின்றனரே தவிர, வன்முறையில் ஈடுபட்டவர்களைக் கலைந்து செல்லுமாறு அறிவுறுத்தல் வழங்கவோ அல்லது அவர்களைக் கைதுசெய்யவோ, எத்தகைய நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் ஊர் மக்கள் கவலை வெளியிட்டனர்.

முஸ்லிம் பகுதியான பலகத்துறைக்குச் செல்லும், அத்தனை வழிகளும் அடைக்கப்பட்டு, முஸ்லிம்கள் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது போன்ற ஒரு நிலை தோன்றியுள்ளது எனவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

பலகத்துறையில் உள்ள முஸ்லிம்கள் பாதுகாப்புத் தேடி அங்குள்ள பெரிய பள்ளிவாசலுக்கருகில், பெருமளவில் கூடியுள்ளனர் எனவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

பதற்ற நிலைமையடுத்து நீர்கொழும்பில் அவசர பொலிஸ் ஊடரங்குச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. நேற்றிரவு 8 மணியிலிருந்து இன்று காலை 7 மணிவரை இந்த ஊடரங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார். (ஒ.5,22)

### யாழ்ப்பாணப்...

னைக்கு அழைத்தவர்கள் மாணவர்களினதும், ஊழியர்களதும் பாதுகாப்புப் பற்றிச் சிந்திருக்கவேண்டும். அவர்கள் இந்த விடயத்தில் பொறுப்புடன் நடக்கவில்லை. இவ்வாறு பொதுஅமைப்புக்கள் கூட்டாகச் சாடியுள்ளன. இலங்கை ஆசிரியர் சங்கம், யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம், கிராமிய உழைப்பாளர் சங்கம், அரசியல் தீர்வை வலியுறுத்துவதற்கான மக்கள் இயக்கம், பூந்தளிர் மாவட்ட பெண்கள் அமைப்பு, புதிய அதிபர்கள் சங்கம், மாவட்ட மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், காணி உரிமைக்கான மக்கள் இயக்கம், வடமராட்சி கிழக்கு குடிமக்கள் குழு, வடமாகாண அபிவிருத்தி உத்யோகத்தர் சங்கம் ஆகிய 10 பொது அமைப்புக்கள் கூட்டாக இணைந்து அனுப்பியுள்ள ஊடகச் செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகச் சோதனையின்போது, அவசியமற்ற காரணங்களை முன்வைத்து இரண்டு மாணவத் தலைவர்களும், பல்கலைக்கழக சிற்றுண்டிச் சாலை நடத்துனரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளமையானது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும் அரச தரப்பின்மீது அதிருப்தியையும் ஏற்படுத்தி உள்ளது.

மாணவர்கள் கைது செய்யப்பட்டவுடன் பொருத்தமான நடவடிக்கையை பல்கலைக் கழக உயர் நிர்வாகத்தினர் மேற்கொள்ளவில்லை. பொலிஸ் நிலையம் சென்று பார்வையிடவும் இல்லை. அவர்களின் நலன்கள் பாதுகாப்புத் தொடர்பாகவும் எந்த ஒரு நடவடிக்கைகளையும் அன்றைய தினம் மேற்கொண்டிருக்கவில்லை. இந்தச் செயற்பாடுகள் மிகவும் வேதனையளிக்கும் விடயமாக உள்ளதுடன் இவர்களின் இத்தகைய செயற்பாடுகள் எமக்கு சந்தேகத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்துகின்றன.

சாதாரண சோதனை நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட அப்பாவிகளை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரிப்பதற்கு அனுமதி கோரியுள்ளமை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

**நோக்கம் திருப்பப்படுகின்றது**

மறுபக்கத்தில் இஸ்லாமிய தீவிரவாத அமைப்பிடமிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கென்று நாடாளுமன்றத்தில் அவசரகால சட்டத்தை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றி, நிறைவேற்ற வேண்டிய கடமையைத் திசைதிருப்பும் முகமாக மீண்டும் தமிழ் மக்கள் மத்தியில் திருப்பி அரசு செயற்பட விளைவதானது, சிங்கள பௌத்த பேரினவாதத்தின் மனோநிலையிலேயே தமிழ் மக்கள் நோக்கப்படுகின்றார்கள் என்ற செய்தியை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இத்தகைய அவசியமற்ற கைதுகள் தமிழ் மக்களின் உணர்வுகளை சீண்டிப்பார்க்கும் செயற்பாடுகளாக மாறிவிடக்கூடாது என்பதை சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரிடமும் வேண்டுகோளாக முன்வைக்கின்றோம்.

இந்த நிலைமைகளைக் கவனத்தில் எடுத்து கைதுசெய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்களையும், சிற்றுண்டிச்சாலை நடத்துனரையும் உடன் விடுவிக்க வேண்டும். பல்கலைக்கழக நிர்வாகம் மூவரினதும் விடுதலை தொடர்பாக பொறுப்போடு செயற்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கும் அதே வேளையில் அரசியல் தலைவர்களும் மாணவர்களின் கல்வி மற்றும் தொழில் நடவடிக்கைகள் அச்சமின்றி சுமூகமாக தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசின் பங்காளிகளாகச் செயற்படும் தமிழ்த் தலைமைகள் இவ் விடயத்தில் விரைந்து செயற்பட்டிருந்தால் கைது இடம்பெறாமலேயே தடுத்திருக்க முடியும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில்; கல்வி நடவடிக்கைகளை தொடர்வதில் ஏற்படக்கூடிய அச்சம் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பாலும் விரைந்து தீர்க்கப்பட்ட வேண்டும். இல்லையேல் தமிழ் மக்கள் மீது திட்டமிட்டுதிருப்பிவிடப்பட்ட இந்த மோசமான நடவடிக்கைகள் இயல்புநிலையை குழப்பமடைய வைக்கும் செயற்பாடாகிவிடும் - என்றுள்ளது. (ஒ.5)

### மாகந்துரே...

டுபாயில் இருந்து நாடுகடத்தப்பட்ட நிலையில், கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

நேற்று அதிகாலை டுபாயில் இருந்து நாடுகடத்தப்பட்ட மாகந்துரே மதுஷ் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வந்திறங்கியதும், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவரைக் கைது செய்தனர்.

பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பாக இலங்கையில் தேடப்படும் முக்கிய குற்றவாளியான மாகந்துரே மதுஷ் கடந்த பெப்ரவரி மாதம் டுபாயில் விருந்து நிகழ்ச்சியின் போது மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

அவருடன் கைது செய்யப்பட்டவர்கள் பலர் நாடுகடத்தப்பட்ட நிலையில் நேற்று அதிகாலை அவரும் டுபாய் அதிகாரிகளால் கொழும்புக்கு அனுப்பப்பட்டார். இதன்போதே அவர் கைது செய்யப்பட்டார். (ஒ.5)

### 24 கைப்பேசி...

நடவடிக்கையில் 24 கைப்பேசிகளை வைத்திருந்த ஒருவரை சந்தேகத்தில் இராணுவத்தினர் கைது செய்து மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. (ஒ.5,56)

# ஆனைக்கோட்டை யூனியன் அரையிறுதிக்குச் சென்றது


யாழ்ப்பாணம், மே 6
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் ஆனைக்கோட்டை யூனியன் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற முதலாவது காலிறுதியாட்டத்தில்; ஆனைக்கோட்டை யூனியன் அணியை எதிர்த்து புங்குடுதீவு சென். சேவியர் அணி மோதியது.
நிர்ணயிக்கபட்ட நிமிடங்களில் இரண்டு கோல்கள் எதையும் பதிவுசெய்யவில்லை. இதனால் சம நிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.. முடிவில் 4:2 என்ற



கோல் கணக்கில் ஆனைக்கோட்டை யூனியன் அணி வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. யூனியனின் கோல் காப்பாளர் அனிஸ்ரன் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். (ம-23)

## ஹைதராபாத்தை இலகுவாக வீழ்த்தி பெங்களூருக்கு ஆறுதலான வெற்றி!

ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற ஆட்டத்தில் ஹைதராபாத்தை இலகுவாக வீழ்த்தி ஆறுதல் வெற்றிபெற்றது பெங்களூர் றோயல் சலஞ்சரஸ்.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணி 7 இலக்குகளை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக வில்லியம்சன் 70 ஓட்டங்களையும், கப்ரில் 30 ஓட்டங்களையும், சங்கர் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் சுந்தர் 3 இலக்குகளையும், சைனி 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய பெங்களூர் அணி பார்திவ் பட்டேல், கோக்லி, வில்லியர்ஸ் ஆகிய முன்னணி வீரர்களை ஆரம்பத்திலேயே இழந்தது. எனினும் மத்திய வரிசையில் ஹைட்மயர், குர்கீரட் சிங் இருவரும் சிறந்த முறையில் துடுப்பெடுத்தாடினர். ஹைட்மயர் அதிரடியாக விளையாடி 75 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். குர்கீரட் சிங் 65 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். 4 பந்துகள் மீதமிருக்க 6 இலக்குகளை இழந்து 178 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. (ம)



## வலைப்பந்தில் நல்லூர் அணி சம்பியனானது

யாழ்ப்பாணம், மே 6
யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் நல்லூர் பிரதேச .செயலக இளைஞர் கழக அணி கிண்ணம் வென்றது.
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நல்லூர் இளைஞர் கழக அணியை எதிர்த்து உடுவில் பிரதேச இளைஞர் கழக அணி மோதியது. 19:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நல்லூர் பிரதேச செயலக இளைஞர் கழக அணி வெற்றி பெற்றது. (ம-23)

## மைதான சுற்றுமதிலுக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், மே 6
மல்லாகத்தில் யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்துக்கு என அமையவிருக்கும் மைதானத்துக்கான சீரமைப்புப் பணிகளுக்கான முதற்கட்டமாக மைதானத்துக்கான சுற்று மதில் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட துப்பாட்டச் சங்க தலைவர் நிசாந்தன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வலி வடக்கு பிரதேச சபையின் தவிசாளார் சுகிர்தன், திருமதி சிறி பாஸ்கரன், யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தின் உறுப்பினர்கள், சிறி பாஸ்கரன் அறக்கட்டளை நிதியத்தின் உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-23)



## ஊரெழு றோயல் அரையிறுதியில்!

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் ஊரெழு றோயல் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் றோயல் அணியை எதிர்த்து கொற்றாவத்தை சிவானந்தா அணி மோதியது. 7:1 என்ற கோல் கணக்கில் ஊரெழு றோயல் அணி வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

## தெல்லிப்பழை செயலக அணி வலைப்பந்தில் சம்பியனானது!

யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் தெல்லிப்பழை இளைஞர் கழக சம்மேளன அணி கிண்ணம் வென்றது.
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக இளைஞர் கழக அணியை எதிர்த்து உடுவில் பிரதேச செயலக அணி மோதியது. 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தெல்லிப்பழை பிரதேச செயலக இளைஞர் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

# ரோகித்தைக் கட்டுப்படுத்துவது கடினம் கிளன் மக்ஸ்வெல் இப்படித் தெரிவிப்பு

களத்தில் நின்று நிலைத்துவிட்டால் ரோகித் சர்மாவைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினம் என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் வீரரான மக்ஸ்வெல்.
உலகக்கிண்ணத் தொடர் நெருங்கும் நிலையில் ஒவ்வொரு அணிகளிலும் இடம்பெற்றுள்ள வீரர்கள் தத்தமது கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றனர். இவ்வாறிருக்க ரோகித் தொடர்பில் இப்படித் தெரிவித்தார் மக்ஸ்வெல்.



அவர் மேலும் தெரிவித்ததாவது: ரோகித் சர்மா எந்த விடயத்துக்கும் பெரிதாக சிரத்தை எடுத்துக்கொள்ளாத மனிதர். ஏனையவீரர்கள் களத்தில்நிலைப்பெற்றுக் கொள்வதைக் காட்டிலும் சிறிது நேரம் எடுத்துக்கொள்வார்.
எந்த விடயத்தையும் எளிதாக எடுத்துக் கொள்ளும் ரோகித் சர்மாவின் துடுப்பாட்டத்தை நான் ரசித்துப் பார்ப்பேன். அவர் களத்தில் நிலைத்து நின்று விட்டால், அந்த ஆட்டமே இந்திய அணிக்கு எளிதாக மாறி, வெற்றி ஏறக்குறைய கைக்கு அருகே வந்துவிடும். ஆதலால் அவரிடத்தில் அவதானம் அவசியம் என்றார். (ம)

# மட்ரிட் – மார்செலோ ஒப்பந்தம் கைச்சாத்து




ஸ்பெய்னின் புகழ்பெற்ற கால்பந்தாட்டக் கழகமான ரியல் மட்ரிட்டின் செல்லப்பிள்ளையாக மார்செலோ தொடர்ந்தும் இருப்பார்.

பிரேசில் அணியின் நட்சத்திர வீரரான மார்செலோ, ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் கழகத்துக்காகவும் விளையாடி வருகிறார். மட்ரிட்டின் முக்கியப் புள்ளிகளில் ஒருவராகவும் அவர் விளங்குகிளார். அணியின் வெற்றிக் கொண்டாட்டங்களில் மார்செலோவுக்கு முக்கிய இடம் வழங்கப்படும். இதனால் மார்செலோவை மட்ரிட்டின் செல்லப்பிள்ளை என்றே பன்னாட்டு ஊடகங்கள் பலவும் குறிப்பிடுகின்றன. அவருக்கும் மட்ரிட்டுக்கும் இடையிலான ஒப்பந்தம் இந்த மாத்துடன் முடிவுக்கு வரும் நிலையில் இருந்தது. எதிர்பார்க்கப்பட்டதைப் போல் மார்செலோவின் ஒப்பந்தம் நீட்டிக்கப்பட்டுள்ளது. அதுவும் அடுத்த 2022ஆம் ஆண்டு வரை இந்த ஒப்பந்த நீட்டிப்பு கைச்சாத்தாகியுள்ளது. (ம)



இங்கிலாந்தில் இந்த மாதம் 30ஆம் திகதி உலகக்கிண்ணத் தொடர் ஆரம்பிக்கவுள்ள நிலையில் இந்தத் தொடருக்காக வேகமாக தயாராகி வருகின்றன இங்கிலாந்து மைதானங்கள். அங்குள்ள ஓவல் மைதானமும் அவ்வாறு துரித கதியில் தயார்ப்படுத்தப்பட்டு வருகின்றது. அந்த மைதானத்தின் ஒளிப்படமே இது. (ம)

# கிரிக்கெட்டைப் பொறுத்தவரை தலைவருக்குத்தான் அதிகாரம்!

## பயிற்சியாளர் இரண்டாம் பட்சம்தான் என்கிறார் முன்னாள் வீரர் கங்குலி




கிரிக்கெட்டைப் பொறுத்தவரையில் அணித் தலைவருக்கே அதிகாரங்கள் அனைத்தும் உள்ளன. பயிற்சியாளர்கள் இரண்டாவது பட்சத்திலேயே இருக்க வேண்டும்.

ஆனால் சில பயிற்சியாளர்கள் அணித் தலைவருக்குரிய அதிகாரங்களைப் பறித்தெடுக்க முயல்கின்றனர் என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி.

இந்திய அணியில் அணித் தலைவர் கோக்லிக்கு உள்ள அதிகாரங்களை தலைமைப் பயிற்சியாளர் ரவிசாஸ்திரி ஆக்கிரமிக்கிறார்.

வீரர்களின் அணித் தெரிவில் தலையிடுகிறார் என்ற பொதுவான கருத்துக் கணிப்புக்கள் நிலவு கின்ற நிலையில் கங்குலி இவ்வாறானதொரு குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஒவ்வொரு கிரிக்கெட் அணிக்கும் பயிற்சியாளர் என்பவர் மிகவும் முக்கியமானவர்தான். ஆனால், கிரிக்கெட் என்பது கால்பந்து விளையாட்டு அல்ல என்பதை ஒவ்வொரு பயிற்சியாளரும் புரிந்துகொள்ள வேண்டும். கால்பந்துப் போட்டியில் தலைவரை செயற்படவிடாமல், பயிற்சியாளர் களத்தில் இருந்துகொண்டே வழிமுறைகளையும், உத்தரவுகளையும் பிறப்பித்துக்கொண்டே இருப்பார். அணித் தலைவரை சுயமாக எந்தவிதமான முடிவும் எடுக்கவிட மாட்டார்கள். அதுபோல கிரிக்கெட் விளையாட்டிலும் செய்யக்கூடாது.

ஆனால், எனக்குத் தெரிந்து ஏராளமான கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர்கள் கால்பந்து அணியைப் போல் கிரிக்கெட் அணியை நடத்தி வருகிறார்கள். கால்பந்து பயிற்சியாளர்கள் பெர்குசன்ஸ், மோரின்ஹோ, சிடேன் ஆகியோரைப் பார்த்து, கிரிக்கெட் விளையாட்டும் கால்பந்துபோல் இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள், அதுபோல் நடத்தப்பட வேண்டும் என விரும்புகிறார்கள். கிரிக்கெட் என்பது தலைவர்களின் விளையாட்டு. தலைவர் களத்தில் இறங்கி சுயமாகச் சிந்தித்து, சூழ்நிலைக்கு ஏற்பட முடிவெடுத்து விளையாடும் அற்புதமான விளையாட்டு. ஆனால், இதில் பயிற்சியாளர்கள் தலைவரின் அதிகாரத்தை, பதவியை ஆக்கிரமிக்க நினைக்கிறார்கள். இது நடக்கக்கூடாது.

நான் இந்திய அணியின் தலைவருக்கு மட்டுமல்ல, அனைத்து அணியின் தலைவர்களுக்கும் கூற விரும்புவது, உங்களுடைய அணியில் உங்களைக் காட்டிலும் சிறந்த புத்திசாலித்தனமான வீரர்கள் இருக்கலாம்.

நீங்கள்கூட சிறந்த தலைவராக இருக்க அந்த நேரத்தில் தவறிவிடலாம், சில நேரங்களில் அந்த வீரர்கள் உங்களைக் காட்டிலும் நல்ல யுத்திகளைக் கொடுப்பார்கள், அதை 'ஈகோ' பார்த்துப் பின்பற்றாமல் இருந்துவிடக்கூடாது' என்றார். (ம)

# நெய்மர் விவகாரத்தில் முறைகேடு இருந்தால் பரிஸ் ஜேர்மன் நீக்கம்

## லா லிகா எச்சரிக்கை




நெய்மரைக் கொள்வனவு செய்த விவகாரத்தில் முறைகேடு இருந்திருந்தால் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணி நீக்கப்படும் என்று தெரிவித்தார் ஸ்பெய்னின் லா லிகா நிர்வாகத்தின் தலைவர் சேவியர் டெபாஸ்.

பார்சிலோனா கழகத்துக்காக விளையாடிவந்த நெய்மர் கடந்த வருடம் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணியால் வாங்கப்பட்டார். இவரின் பரிமாற்றத்துக்காக 222 மில்லியன் பவுண்டுகளை பரிஸ் ஜேர்மன் வழங்கியது. இந்தப் பரிமாற்றத்தில் பரிஸ் ஜேர்மன் முறைகேடு செய்தது என்று தற்போது படிப்படியாக நிரூ பிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் பரிஸ் செயின்ட் ஜேர்மன் முறைகேடு செய்திருந்தால் ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் இருந்து அந்த அணி தூக்கி எறியப்படும் என்று எச்சரித்துள்ளார் ஸ்பெய்னின் லா லிகா நிர்வாகத்தின் தலைவர் சேவியர் டெபாஸ். (ம)

# பரிஸ் செயின்ட் ஜேர்மனில் நெய்மர் முடிவு கண்டன 'மட்ரிட்' வதந்திகள்




பிரபல கால்பந்தாட்ட வீரரான நெய்மர், ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் கழகத்துக்காக விளையாட வுள்ளார் என்று தவல்கள் வெளிவந்திருந்த நிலையில், அவர், தான் பிரான்ஸின் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணிக்காகவே தொடர்ந்தும் விளையாடவுள்ளார் என்று தெரிவித்தார்.

ஸ்பெய்னின் பார்சிலோனா கழகத்துக்காக விளையாடி வந்தவர் நெய்மர். கடந்த வருடம் அவரை பார்சிலோனாவிடம் இருந்து வாங்கியது பிரான்ஸின் பரிஸ் செயின்ட் ஜேர்மன். ஆனால் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணியில் நெய்மர் தொடர்ந்து விளையாட மாட்டார் என்றும் ரியல் மட்ரிட் கழகத்துக்காக ஒப்பந்தம் செய்யப்படவுள்ளார் என்றும் தகவல்கள் வந்திருந்தன. ரியல் மட்ரிட் கழகத்தின் சில வீரர்கள் நெய்மர் ரியல் மட்ரிட்டுக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டால் அது சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்திருத்தனர். இதனால் நெய்மர் ரியல் மட்ரிட்டுக்குச் செல்வது கிட்டத்தட்ட உறுதி என்றே கருதப்பட்ட நிலையில், அந்தச் செய்திகளை மறுத்து பரிஸ் செயின்ட் ஜேர்மனில்தான் தொடரும் முடிவை அறிவித்துள்ளார் நெய்மர். எந்த அணிக்காகவும் விளையாட நான் சம்மதிக்கவில்லை. நான் இங்குதான் உள்ளேன் (பரிஸ் செயின்ட் ஜேர்மன்). தொடர்ந்தும் பி.எஸ்.ஜி. அணிக்காகவே விளையாடுவேன். என் தொடர்பில் தொடர்ந்து வெளிவரும் வதந்திகளை நம்ப வேண்டாம் என்று நெய்மர் மேலும் தெரிவித்தார். (ம)










இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.